Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :286 ஆவணி 26 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 11 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



முச்சந்தி முரளி

"தமிழ்ச்சி குவேனி இருக்கேக்க, கள்ளத்தோணியில வந்த விஜயன்ர வாரிசு இப்பிடி தான் கதைப்பார் கண்டியளோ"

# வடக்கு மக்களுக்கு வரலாறு கிடையாது

## இராஜாங்க அமைச்சர் வீரசேகர நாடாளுமன்றில் எகத்தாளம்



**கொழும்பு, செப்ரெம்பர் 11**
**வடக்கில் உள்ள மக்களுக்கு தனித்துவமான நாகரிகமோ வரலாறோ கலாசாரமோ கிடையாது அப்படிப் பட்டவர்களுக்கு எமது பாரம்பரியம் பற்றி விமர்சிப்பதற்கு எந்த உரிமையும் கிடையாது என்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர.**

18 ➤

## மக்களிடம் இருந்து அரசு தப்பிக்கொள்ள முடியாது

### ரணில் நம்பிக்கை



கொழும்பு, செப்.11
19ஆவது திருத்தத்தின் ஜனநாயகத் தன்மையை அழிப்ப

18 ➤

## மதக் கட்டுமானங்களுக்கு குருந்தூர்மலையில் தடை!

### காவலரணுக்கு மட்டும் மன்று அனுமதி

முல்லைத்தீவு, செப்.11
தமிழ் மக்களின் பூர்வீக இடமான குருந்தூர்மலையில் சிவில் பாதுகாப்புக் காவலரண் அமைப்பதற்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்று இணங்கியது. அதே வேளை அந்தப் பகுதியில் இனமுறுகலைத் தோற்றுவிக்கும் வகையில் மதங்களுடன் தொடர்பு

18 ➤

## தவறி வீழ்ந்த இளைஞர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், செப்.11
வவுனியாவுக்கு வேலைக்கு வந்த மட்டக்களக்களப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வேலையின்போது தவறி வீழ்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
மட்டக்களப்பு, இருதயபுரத்தைச் சேர்ந்த பாலன் சசிக்குமார் (வயது-22) என்பவரே உயிரிழந்துள்ளார்.
இவர் உட்பட 5 பேர் வவுனியா சைவ வித்தியாசாலை பாடசா

18 ➤

## தமிழர் விவகாரத்தில் மூக்கை நுழைக்காதீர்

### *நாடாளுமன்றில் விக்கி எச்சரிக்கை*

கொழும்பு, செப். 11
திருகோணமலை, திரியாய் என்ற இடத்தில் கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியைச் சேர்ந்த பிக்கு ஒருவர் ஆயிரம் ஏக்கர் காணிகளில் இதுவரை காலமும் பயிர் செய்து வந்த விவசாயிகளை அந்தக் காணிக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று பயமுறுத்தியமைக்கு நாடாளுமன்றத்தில் கடுமையாக விமர்சனம் செய்துள்ள சி.வி.விக்னேஸ்வரன் இதனால் தான் தமிழ் மக்கள் காணி அதிகாரம் தமது கைகளில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

(விரிவு 16 ஆம் பக்கம்)

## நாடாளுமன்ற அமர்வு நேரங்களில் மாற்றம்!

கொழும்பு, செப்.11
நாடாளுமன்ற அமர்வு நேரங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற

18 ➤

## முன்னோக்கி செல்லவே 20ஐ உருவாக்குகிறோம்!

### ஜனாதிபதி விளக்கம்



கொழும்பு, செப்.11
20ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் நோக்கம் 19ஆவது திருத்தத்தின் மூலம் ஏற்ப

18 ➤

## தேசிய பால் உற்பத்தியில் வீழ்ச்சி!

கொழும்பு, செப்.11
2019 ஆம் ஆண்டில் தேசியபால்உற்பத்தி 6.3 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.
2018 ஆம் ஆண்டுடன்

18 ➤

## 43 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, செப்.11
கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும், கஞ்சாவைக் கடத்துவதற்கு உளவுத் தகவல் வழங்கிய குற்றச்சாட்டில் இன்

18 ➤

## ஹெரோய்ன் வைத்திருந்தவர் குருநகரில் கைதானார்

யாழ்ப்பாணம், செப். 11
500 கிராம் கேரளக் கஞ்சாவை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் விசேட அதிரடிப்படையினர் யாழ்ப்பாணம் குருநக

18 ➤

## தவறான முடிவெடுத்து உயிர்விட்ட காதலர்கள்

### கிளிநொச்சியில் சோகம்



கிளிநொச்சி, செப்.11
கிளிநொச்சி பெரியபரந்தன் பகுதியில் தவறான முடிவெடுத்துத் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் மற்றும் பெண்ணின்

17 ➤

## புலம்பெயர் இலங்கையரை அழைக்கின்றார் மஹிந்த!



கொழும்பு, செப்.11
புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் மற்றும் மக்கள் அமைப்புக்கள் எந்த வித அச்சமும் இன்றி எம்முடன் இணைந்து பணியாற்ற வாருங்கள் என்று புலம்பெயர்ந்துள்ள சில முதலீட்டாளர்களை சந்தித்த போது பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

18 ➤





காசை கையால் தொடாமல்

Bill செலுத்தலாம் ரீலோட் போடலாம் எந்தவொரு வங்கிக் கணக்கிற்கும் பணம் அனுப்பலாம்
DFCC மற்றும் வேறு வங்கியின் Credit Card கட்டணத்தை செலுத்தலாம்
அனைவரினதும் Phoneக்கு பணம் அனுப்பலாம்
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0112 350000

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி

# மாநகர சபை கடைகளின் வாடகைகளில் அதிகரிப்பு

## ஆளுநரைச் சந்தித்துப் பேச வணிகர் கழகம் முடிவு

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான கட்டடங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களிடம் அறவிடப்படும் வாடகைப் பணம் அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸுடன் பேச்சு நடத்துவதற்கு யாழ்ப்பாண வணிகர் கழகம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் திங்கட் கிழமை வடக்கு மாகாண ஆளுநரையும், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலரையும் சந்தித்துப் பேச்சு நடத்துவற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிரந்தர கட்டடங்களில் 454 வர்த்தகர்களும், மரக்கறிச் சந்தையில் 19 வர்த்தகர்களும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடமிருந்து பெறப்படும் வாடகைப் பணத்தை அண்ணளவாக 75 சதவீதம் வரைக்கும் அதிகரிப்பதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது. மாநகர சபைக் கட்டடத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் இது தொடர்பில் வணிகர் கழகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து வணிகர் கழகத்தின் பிரதிநிதிகளுக்கும், யாழ்ப்பாணம் மாநகர மேயருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. கொரோனா காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உள்ளிட்டவற்றைக் கருத்தில் கொண்டு இரண்டு ஆண்டுகளுக்கு வாடகையில் அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டாம் என்று வணிகர் கழகத்தினர் கோரிக்கை விடுத்துள் ளனர்.

விலைமதிப்பீட்டுக்கு அமைவாகவே புதிய வாடகை விதிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் தம்மை விடக் கூடிய அதிகாரமுள்ள தரப்புக்களே முடிவு எடுக்கலாம் என்றும் மாநகர சபை மேயர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு வணிகர் கழகத்தினர் தீர்மானித்துள்ளனர். (ஒ-5)

வெலேசுதா, கஞ்சிப்பான உட்பட

# பூசாவில் 40 பேர் உணவு தவிர்ப்பு

கொழும்பு, செப்.11

பூசா தடுப்பு முகாமிலுள்ள விசேட பிரிவில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 கைதிகள் நேற்று முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாதாள கோஷ்டி உறுப்பினர்களான வெலேசுதா, கஞ்சிப்பான இம்ரான், பொடி லெசி, கொஸ்கொட தாரக ஆகியோரும் இதில் உள்ளடங்குகின்றனர் என்று சிறைச்சாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

'கொரோனா' வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த தொலைபேசி வசதியை மீளப்பெற்றமை, கைதிகளை பார்வையிடுவதற்கு வரும் சட்டத்தரணிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றமை, நீதிமன்ற விசாரணைக்காக அழைத்துச் சென்று மீண்டும் சிறைச்சாலைக்கு எடுத்துவரும்போது மேற்கொள்ளப்படும் பரிசோதனை ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இவ்வாறு உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (எ44)

# சபையின் தீர்மானத்தையடுத்து நிறைவுக்கு வந்தது போராட்டம்

வவுனியா, செப். 11

வவுனியா நகரசபை சுகாதாரத் தொழிலாளர்கள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நடத்திவந்த போராட்டம் நேற்றுமாலை முடிவுக்கு வந்தது.

வவுனியா நகரசபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் உறுதி மொழியையடுத்து போராட்டத்தைக் கைவிட்டோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பளப் பிரச்சனை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா நகர சபை சுகாதார தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டம் தொடர்பில் வவுனியா நகரசபையின் விசேட அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய நகரசபைத் தலைவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் உறுதி மொழிக் கடிதம் வழங்கினார்.

"நகரசபையின் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களின் சம்பள ஏற்றத்தாழ்வு தொடர்பான கோரிக்கையை மீள்பரிசீலனை செய்வதற்கு சபை அலுவலர்கள் கொண்ட குழுவுடன் இணைந்து குறித்த விடயத்துடன் தொடர்புடைய ஒருவரை நியமித்து சம்பளத்தை மீள் பரிசீலனை செய்வதாக விசேட கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே தாங்கள் மேற்கொள்ளும் போராட்டத்தை நிறுத்தி உடன் கடமைக்கு திரும்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்" என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து போராட்டம் தற்காலிக நிறுத்தப்பட்டு கடமைக்குத் திரும்புகின்றோம் என்றும் எதிர்வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதியை சந்திக்கவுள்ளோம் என்றும் சுகாதார தொழிலாளர்கள் தெரிவித்தனர். (த-18)

தேவை

வடிவமைப்பாளர்

Graphic designers

Indesign
Adobe photoshop
Corel draw
என்பவற்றில்
வடிவமைப்பு அனுபவம்
கொண்டவர்களுக்கு
உடனடி வாய்ப்பு

IT Administrator

Manage electronic equipment
Install network and computer system
Maintain, repair and upgrade the operating system including hardware and software
Monitor the performance of existing computer systems and IT infrastructures
முன்னனுபவம் விரும்பத்தக்கது

நீங்கள் பொருத்தமானவரா?
சுயவிவரக் கோவையை
உடனே அனுப்புங்கள்.



சுயவிவரக் கோவைகளை அனுப்ப வேண்டிய முகவரி
மனிதவள முகாமையாளர்,
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
info@uthayan.com

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 42 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், செப். 11

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டு 41 ஆயிரத்து 650 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன என, மாவட்டச் செயலக புள்ளி விவரத் தகவல்கள் ஊடாகத் தெரியவருகின்றது.**

2018ஆம் ஆண்டு 41 ஆயிரத்து 4 ஆக இருந்த நிலையில், 646 பேரினால் அதிகரித்து 41 ஆயிரத்து 650 ஆகியுள்ளன.

கணவன் உயிரிழந்தமை காரணமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகிய 32 ஆயிரத்து 736 பேரும், குடும்பப் பிரிவு காரணமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகிய 4 ஆயிரத்து 683 பேரும், கணவன் காணாமல் போனமை காரணமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகிய 492 பேரும், திருமணமாகாமல் குடும்பத்துக்கு தலைமை தாங்கும் பெண்களாக ஆயிரத்து 991 பேரும், விவாகரத்துக் காரணமாக 453 பேரும், கணவர் அங்கவீனம் காரணமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகிய 369பேரும், கணவர் மதுபோதைக்கு அடிமையாகுதல், கணவர் நீண்ட கால நோயால் பாதிக்கப்படுதல், கணவர் உளரீதியானபாதிப்புக்குஉள்ளாகுதல்ஆகிய காரணங்களால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகிய 901 பேருமாக 41 ஆயிரத்து 650 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் யாழ்ப்பாணமாவட்டத்தில் உள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலேயே கூடியளவு பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன. (ஓ.5)

## பாடசாலை இடைவிலகல் வடக்கில் குறைவடைகிறது

யாழ்ப்பாணம், செப். 11

பாடசாலைகளிலிருந்து சிறுவர்கள் இடைவிலகிச் செல்லும் போக்கானது வடக்கு மாகாணத்தில் குறைவடைந்து செல்வதாகப் புள்ளி விவரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

2016ஆம் ஆண்டு 158 பேரும், 2017ஆம் ஆண்டு 94 பேரும், 2018ஆம் ஆண்டு 118 பேரும், 2019ஆம் ஆண்டு 79 பேரும் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர்.

2019ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்திலேயே அதிகளவான சிறுவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர். (ஓ.5)

## போக்குவரத்து விதிகளை மீறியோர் மீது நடவடிக்கை



வவுனியா, செப்.11

வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றத் தவறிய 28 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார் .

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மானவடுவின் ஆலோசனைக்கு அமைய குருமன்காடு சந்தியில் போக்குவரத்து பொலிஸாரால் மேற்கோள்ளப்பட்ட நடவடிக்கையில் போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 28 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தலைக்கவசம் இன்றிப் பயணித்தோர், கைத்தொலைபேசி பாவித்தல் , காப்புறுதி ஆணவம், மோட்டார் அனுமதிப்பத்திரம் இன்றிப் பயணித்தோர், மதுபோதையில் வாகனம் செலுத்தியோர் எனப் பல்வேறு விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 28 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதில் நான்கு பேருக்கு எதிராக நீதிமன்ற வழக்கு முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஏனைய 24 பேருக்கு தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து நகரில் முன்னெடுக்கப்படும். பொதுமக்கள், சாரதிகள் போக்குவரத்துப் பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்றார். (எ10)

## மாணவனின் மீது ஆசிரியர் தாக்குதல் என குற்றச்சாட்டு

வவுனியா, செப்.11

வவுனியாவில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவர் ஒருவர் மீது ஆசிரியர் தாக்குதல் நடத்தியுள்ளார் என்றும், அதில் பாதிப்படைந்த மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. மாணவனின் பெற்றோரே இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

நேற்று பாடசாலை காலைப் பிரார்த்தனையின்போது தரம் 7இல் கற்கும் இந்த மாணவனை ஆசிரியர் தாக்கினார் என்றும், அதில் மாணவனின் பல் உடைந்து மாணவன் பாதிப்புக்குள்ளானார் என்றும் மாணவனின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை நிறைவடைந்து வீடு திரும்பிய மாணவன் பாடசாலையில் நடந்த சம்பவத்தை பெற்றோர்களிடம் தெரிவித்ததை அடுத்து அவர்கள் மாணவனை வவுனியா மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். (எ10)

## சைக்கிள் சில்லில் தாவணி சிக்கியதில் பெண் காயம்

யாழ்ப்பாணம், செப்.11

சைக்கிளில் சென்ற பெண், அவரது தாவணி சில்லுக்குள் சிக்கியதில் கழுத்து நெரியுண்டு கீழே விழுந்து காயடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை ஏழாலை தெற்கு மயிலங்காடு சிறிமுருகன் வித்தியாசாலைக்கு அண்மையில் நடந்துள்ளது. ஏழாலை தெற்கில் வசிக்கும் ம.சாளினி (வயது30) என்பவரே காயமடைந்தார்.

பணிக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பியபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. காயமடைந்த பெண் வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (எ39)

## பாலியல் தொழிலை கட்டுப்படுத்தக் கோரிக்கை

வவுனியா, செப்.11

வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் பாலியல் தொழிலில் ஈடுபடுவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா நகரசபை உறுப்பினர் பிரபாகரன் ஜானுஜன் எழுத்து மூலம் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் அண்மைக்காலமாக பாலியல் தொழிலில் ஈடுபடுவோரின் தொகை அதிகரித்துள்ளது. அதனால் பழைய பேருந்து நிலையத்திலுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் , பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர். அந்தப் பகுதிக்கு வரும் பெண்கள் இதனால் அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நகரசபை உறுப்பினர் என்ற ரீதியில் கோரிக்கை விடுக்கின்றேன் என்று அவர் பொலிஸாருக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளார். (எ10)

## மோதலில் பெண்கள் காயம்


சாவகச்சேரி, செப்.11

இரு குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான இரு பெண்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருசுவில், தவசிகுளத்தில் நடந்துள்ளது. காயமடைந்த பெண்கள் 19 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெட்டுக் காயங்களுக்கு உள்ளானவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ9)

## புலிகளின் ஆயுதம் தேடி முல்லையில் அதிரடிப் படை அகழ்வு!



முல்லைத்தீவு, சாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைத் தேடி சிறப்பு அதிரடிப் படையினர் அகழ்வுகளை மேற்கொண்டபோதும், ஆயுதங்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை. சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இந்த அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்ற அனுமதி பெற்று இந்த அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் ஆயுதங்களோ, தடயங்களோ கண்டுபிடிக்கப்படாத நிலையில் அகழ்வுப் பணிகள் பின்னர் கைவிடப்பட்டன. (எ9)

# சமூக விழிப்புணர்வால்தான் தற்கொலையைத் தடுக்கலாம்

## யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் யமுனாநந்தா தெரிவிப்பு




யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 11

**சமூக மட்டத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலமே வடபகுதியில் தற்கொலைகளைத் தடுக்க முடியும் என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.**

உலக தற்கொலை தடுப்புத்தினம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய தினம் (நேற்று) உலக தற்கொலை தொடர்பான விழிப்புணர்வு தினமாக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோலவே இன்றையதினம் நாமும் தற்கொலை தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது. பொதுவாக தற்கொலையானது உலகில் அதிகரித்துச் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது

ஆண்டுதோறும் 80 ஆயிரம் பேர் உலகிலே தற்கொலை செய்கிறார்கள். சுமார் 20 மில்லியன் பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள். அந்த வகையில் ஒரு செக்கனுக்கு 6 பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள். 40 செக்கனுக்கு ஒருவர் தற்கொலைமூலம் மரணமடைகின்றார். அதேபோல யாழ் மாவட்டத்திலும் கடந்த வருடம் யாழ் போதனா வைத்தியசாலையில் 615 பேர் தற்கொலை முயற்சியினால் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தற்கொலையினால் மரணம் அடைந்திருக்கிறார்கள். அதேநிலைமை இவ் வருடமும் காணப்படுகின்றது. எனவே தற்கொலை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை மிகவும் அவசியமானது. தற்கொலை ஏன் ஏற்படுகின்றது; என்பதுடன் அதைத் தடுப்பது பற்றிய விழிப்புணர்வு மிகவும் அவசியமானதாகும். தற்கொலை குறிப்பாக நான்கு வகையாக காணப்படுகின்றது. முதலாவது உள சார்பு நோயுடையவர்கள், மனச்சோர்வு நோய் உடையவர்கள், சமூக உளத்தாக்கங்கள் காரணமாக இளவயதில் நெருக்கடிகள் ஏற்படுவோர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள். எமது சமூக கட்டமைப்பில் மக்கள் மற்றவர்களுடன் பொருளாதார ரீதியாக மாத்திரமே தொடர்புகளை வைத்துள்ளார்கள். கலாசார உறவுகளோ ஏனைய தொடர்புகளை ப் பேணவோ நேரங்கள் இன்மை காணப்படுகின்றது. நெருக்கமான நேர கட்டமைப்பில் வாழும்போது, நெருக்கீடு வரும்போது அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு யாரும் இல்லை அதனால் அவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இந்த விடயத்தில் நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (ம-இ)





## மரம் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்துத் தடை

கொழும்பு, செப்.11

பெரிய மரம் ஒன்று வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரோலினா பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை முறிந்து வீழ்ந்ததில், ஹற்றன் - கொழும்பு, மற்றும் ஹற்றன் - கண்டி ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டது.

இதனால் சுமார் 30 நிமிடத்துக்கும் மேலாக போக்குவரத்துத் தடைபட்டிருந்தது. இதனால் கொழும்பு, ஹற்றன், கண்டி வைத்தியசாலைகளுக்குச் சென்ற நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதுடன், தொலைபேசிக் கம்பங்கள் மற்றும் மின்சாரக் கம்பங்களும் சேதமடைந்துள்ளன.

இதனையடுத்து, வட்டவளை பொலிஸார் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து வீதியின் குறுக்கே வீழ்ந்த மரத்தினை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர். இதனையடுத்து போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (ற)

## மூன்று குளங்களின் புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் மூன்று குளங்களை ஆழமாக்கி புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மழை நீரைத் தேக்கி வைக்கும் முகமாக இந்த குளங்கள் கனரக வாகனம் மூலம் ஆழமாக்கப்பட்டு வருகின்றன.

நரிக்குண்டுக்குளம், தேவரிக்குளம், முண்டுக்குளம் ஆகிய குளங்களே இவ்வாறு ஆழமாக்கி புனரமைக்கப்பட்டு வருகின்றன. குளங்களின் இந்த புனரமைப்புப் பணிகள் மிகவும் துரிதமாக இடம்பெற்று வருவதுடன், குளங்களைச் சுற்றி பாதுகாப்பு வேலிகளும் அமைக்கப்படவுள்ளன. (ற-17)

## சாவகச்சேரி நீதிமன்றால் வர்த்தகர்கள் மூவருக்கு தண்டம்



சாவகச்சேரி, செப்.11

தென்மராட்சி பிரதேச வர்த்தகர்கள் மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றால், தலா 4 ஆயிரத்து 500 ரூபா வீதம் நேற்றுமுன்தினம் தண்டம் விதிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை மற்றும் நிர்ணய விலையை விடக் கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பனை செய்தமை போன்ற காரணங்களுக்காகவே இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினரால், பிரதேசத்தில் நடத்திய திடீர் பரிசோதனைகளின் போது அவர்களின் வர்த்தக நிலையத்தில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை மற்றும் நிர்ணய விலையை விட கூடுதலான விலைக்கு பொருள்களை விற்பனை செய்தமை தொடர்பாக 12 வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த வாரம் வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவர்களில் மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 4 ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (ற9)



## உடல் வெப்ப நிலை அளவிடும் கருவி அன்பளிப்பு

வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயத்துக்கு உடல் வெப்ப நிலை அளவீடு செய்யும் கருவி அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அந்தக் கருவி கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஒருவரின் நிதிப் பங்களிப்பில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் பாடசாலை அதிபரிடம் நேற்று கையளிக்கப்பட்டது. (வ)



குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீளச் சேர்த்து அவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் கிழக்கு சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ரூபா 2500 வழங்கும் நிகழ்வு செயலகத்தில் இடம்பெற்றது. (ந-150)

## நாட்டில் எவ்விடத்திலும் புத்தரை வைப்போம்

### எம்.பி டயனா கமகே அடாவடிக் கருத்து

கொழும்பு, செப்.11

இலங்கையின் எந்தப் பாகத்திலும் புத்தர் சிலைகளை வைக்கவும், விகாரைகளை அமைக்கவும் எமக்கு உரிமையுள்ளது என ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே தெரிவித்துள்ளார். மகாவம்சத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்கு பதிலுரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு விக்னேஸ்வரன் வழங்கிய நேர்காணலில் மகாவம்சத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் வடக்கு கிழக்கில் பௌத்தர்கள் இல்லாத காரணத்தினால், புத்தர் சிலைகளை நிறுவி வழிபடத் தேவையில்லை எனவும் தெரிவித்திருந்தார். இவரது கருத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய தேவையில்லை.

ஏனெனில், மகாவம்சத்தை பௌத்தர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இதனை உலகமே அங்கீகரித்துள்ளது.

அத்தோடு, இது பௌத்த நாடு என்ற வகையில், புத்தர் சிலைகளை இலங்கையின் எந்தப் பாகத்தில் வைக்கவும், விகாரைகளை அமைக்கவும் எமக்கு உரிமையுள்ளது. இது எமக்கான மத உரிமையாகும். பௌத்தத்திற்கு மட்டுமல்லாமல் ஏனைய மதங்களுக்கும் இதே உரிமை உள்ளது எனத் தெரிவித்தார். (வ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
newuthayan.com



## சாகத் தெரிந்தவர்களுக்கு வாழத் தெரியவில்லையா?

பரந்தன் பகுதியில் தவறான முடிவெடுத்து தங்கள் உயிரை ஒன்றாக மாய்த்துக்கொண்ட காதலர்களின் உடலங்கள் ஒருவாரத்தின் பின்னர் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. எதிர்கால வாழ்வில் ஒன்றாக இணைந்து, மகிழ்வோடு பயணிக்க தாம் கண்ட கனவுகளையெல்லாம் புதைத்து விட்டு, அந்த இளசுகள் இருவரும் இப்படியொரு தவறான முடிவெடுக்க எப்படி மனம் வந்திருக்கும்? சடலங்களைப் பார்வையிட்ட பலரும் “இப்படிச் சாவதென்றால் எங்காவது தூர இடத்துக்குப் போய் யாருக்கும் தெரியாமல் வாழ்ந்திருக்கலாமே” என்று சொல்லாமல் செல்லவில்லை. இந்தக் காதலர்களின் தவறான முடிவெடுப்புக்கு , அவர்களது காதலுக்கு வீட்டில் கிளம்பிய எதிர்ப்பே காரணம் என்று சொல்லப்படுகின்றது. இத்தனைக்கும் அந்த இளைஞன் மின்சார சபையிலும், யுவதி அண்மையில் பட்டதாரிப் பயிலுநராகவும் பணி புரிகின்றனர். இருவரும் திருமண வயதெல்லையைத் தொட்டவர்கள். காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு என்றால் தங்கள் காதலின் வீரியத்தை அவர்களுக்குப் புரிய வைத்து சம்மதம் பெற்றிருக்க வேண்டும். அப்படியும் எதிர்ப்புக்குறையவில்லை என்றால், தங்கள் விருப்பப்படி திருமண பந்தத்தில் இணைந்து இருவரின் சம்பாத்தியத்திலும் எதிர்ப்புத் தெரிவித்த பெற்றோருக்கு முன்னால் வாழ்ந்து காட்டியிருக்க வேண்டும். இதுதான் அவர்கள் தங்கள் காதலுக்குச் செய்யும் மரியாதையாக இருந்திருக்கும். அதைவிடுத்து, சாவது மட்டுமே தங்கள் காதலைப் புனிதமாகக் காட்டும் என மடத்தனமாக முடிவெடுத்து, தங்கள் காதலையே இருள்சூழ்ந்த கொடிய வஸ்துவாக மாற்றிவிட்டார்கள்.

இது போன்ற காதல் தோல்விகளும், தொழில் ரீதியான தோல்விகளும், கடன் சுமைகளும், குடும்ப வன்முறைகளும் பலரை இப்படித் தவறான முடிவெடுக்கத் தூண்டுகின்றன என்று ஆய்வுகள் சொல்கின்றன. அதுவும் மிக நீண்ட போர்ச்சூழலில் குண்டுமழைக்கு நடுவிலும் அசையாத உறுதியோடு வாழ்ந்த தமிழர்கள், இப்போது போர் மௌனிக்கப்பட்ட வேளையில் தங்கள் மனோதைரியத்தை இழந்தவர்களாக எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் உயிரை மாய்ப்பதே தீர்வு என நம்பத் தொடங்கிவிட்டார்கள். முன்னைய காலங்களில் இப்படி தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்தல் என்பது அரிதாகவே நிகழும். ஆனால் இப்போது அப்படியல்ல. தாயார் கொஞ்சம் உரத்து அதட்டினாலும் தற்கொலை, பரீட்சையில் குறைந்த புள்ளி எடுத்தாலும் தற்கொலை, காதல் தோல்வியென்றாலும் தற்கொலை, படம் பார்க்க காசு தராவிட்டாலும் தற்கொலை என்று எதற்கெடுத்தாலும் உயிரை மாய்த்தே தீருவோம் என்று இன்றைய இளையோர் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

கடந்த 4 வருடங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 352 பேர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையானோர் இளையவர்கள். இப்படி அவர்கள் உயிரை மாய்த்துக் கொண்டால், அவர்கள் வேண்டுமானால் அந்தப் பிரச்சினையில் இருந்து விடுபடலாம். ஆனால் அவர்களை நம்பியிருக்கும் பெற்றோர், மனைவி, கணவன், பிள்ளைகள் என்போர் இப்படியான துர்ச் சாவுகளுக்குப் பின்னால் எதிர்கொள்ளும் வசவுகளும், பொருளாதார ரீதியான நெருக்குதல்களும், உளவியல் ரீதியான அழுத்தங்களும் சொல்லி மாளமுடியாதவை. தவறானமுடிவெடுப்புகளால் உயிரை மாய்த்துக்கொள்வோர் தங்கள் அஸ்தமனத்தில் தங்களை நம்பியிருப்போருக்கு தீர்க்கமுடியாத, மறக்கமுடியாத , ஆறாத ரணங்களாக வலிக்கக் கூடிய புதிய பல பிரச்சினைகளைக் கொடுக்கிறார்கள். தவறான முடிவெடுத்து உயிர் மாய்க்க எண்ணுவோர் முதலில், அப்படி உயிர்மாய்த்த ஒருவரது வீட்டுக்குச் சென்று அந்தக் குடும்பம் சந்திக்கும் வலிகளை கண்ணுற்றாலே போதும். தங்கள் முடிவை மாற்றிவிடுவார்கள். நெருப்பெரிந்த பூமிக்குள், எந்தப் பிரச்சினை வந்தாலும் அதனை ஊதித்தள்ளிய நாம், மிகச் சாதாரண பிரச்சினைகளுக்கே உயிரை மாய்க்குமளவுக்கு நலிந்து போவது சரியா?. ஒவ்வொருவரும் தங்களைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்பதும் அவர்களது மனோதைரியத்தை அதிகரிக்கச் செய்து, இப்படியான தவறானமுடிவுகளைத் தவிர்க்கச் செய்யலாம். உயிரின் பெறுமதியை இனியாவது உணருங்கள். உன்னத வாழ்வு அனைவருக்கும் காத்திருக்கிறது.

# '20' இல் திருத்தம் உறுதி
# அரசு அறிவிப்பு

**கொழும்பு, செப். 11**

**அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்படாது. அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டே நிறைவேற்றப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.**

இதற்கு எதிரணி உறுப்பினர்களும் ஆதரவு வழங்கலாம் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது '20' ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

அரசமைப்பின் '20' ஆவது திருத்தச்சட்ட வரைவு வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான கருத்தாடலுக்கு இரு வாரங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. பலரும் பலகோணங்களில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அரசை உருவாக்குவதற்கு பாடுபட்ட தரப்பில் இருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எனவே, வர்த்தமானியை நாளாந்தம் திருத்திக்கொண்டு இருக்கமுடியாது. எனவேதான் அனைத்துக் கருத்துகளையும் உள்வாங்கிய பின்னர், நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போது பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. திருத்தம் மேற்கொள்வதற்கான பொருத்தமான இடமும் இதுவே. 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதனை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தலாம். எனவே, உயர்நீதிமன்றத்தில் சட்டவியாக்கியானமும் கிடைக்கப்பெறும். 20 இற்கு எதிரணி உறுப்பினர்களும் ஆதரவு வழங்கலாம். அதற்காக கட்சி மாறவேண்டும் என்றில்லை. மாறினால்கூட அதனை தடுக்கமுடியாது, என்றார். (ஒ.5,44)

## பொதுமக்கள் தினம் புதன்கிழமையில் இருந்து திங்கட்கிழமைக்கு மாற்றம்

கொழும்பு, செப். 11

அரச நிறுவனங்களில் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்காக மக்களுக்கு இலகுவான வகையில் புதன்கிழமை பொதுமக்கள் தினம்' ஆக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் திங்கட்கி ழமை 'பொதுமக்கள் தினமாக' பிரகடனப்படுத்தினால் மக்களுக்கு மிகவும் இலகுவாக அமையுமென யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

அதற்கமைய இன்றிலிருந்து திங்கட்கிழமை 'பொதுமக்கள் தினமாக' பிரகடனப்படுத்தவும், அனைத்து அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அந்தத் தினத்தில் அலுவலகத்தில் கட்டாயமாக இருத்தல் அவசியமெனவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

(ஒ.இ)

## மாடறுப்பு தடை ஒத்திவைப்பு!

*அமைச்சரவை இணைப்பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 11

இறைச்சிக்காக மாடறுப்பதைத் தடைசெய்யும் யோசனை ஒரு மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது இறைச்சிக்காக மாடறுப்பதைத் தடைசெய்வதற்காக ஆளுங்கட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'இறைச்சிக்காக மாடறுப்பதைத் தடைசெய்யும் யோசனை தொடர்பில் பல்துறையினரினதும் கருத்துகளை உள்வாங்குவதற்காக அந்தத் திட்டம் ஒரு மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கருத்துக்கள் உள்வாங்கப்பட்ட பின்னர் இவ் விடயம் குறித்து இறுதி முடிவெடுக்கப்படும்' என்றும் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார். (ஒ.5,44)

## எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை கொரோனா அச்சத்தாலேயே கைதுசெய்யவில்லை

*நாடாளுமன்றில் அரசு புதுக்கதை*

கொழும்பு, செப். 11

வடக்கு கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் கைது செய்வதில் கொரோனா வைரஸ் குறித்த அச்சம் இருக்கின்றது எனவும், அவர்களைக் கைது செய்தால் எங்கு தடுத்து வைப்பது என்ற சிக்கல் உள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர சபையில் தெரிவித்தார்.

மேலும் நியூ டயமன் கப்பல் மீட்பு பணிகளில் ஈடுபட்ட காரணத்தால் சில நெருக்கடிகள் இருந்தன. எனினும் பாதுகாப்புக் கூட்டத்தில் இந்த விடயங்களை மீண்டும் நாம் வலியுறுத்துகின்றோம். - எனத் தெரிவித்துள்ளார்

எதிர்வரும் காலங்களில் வடக்கு கடல் பகுதி அதிக பாதுகாப்புக்கு உட்படுத்தப்படும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி செயற்பாடுகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே காஞ்சன விஜயசேகர மேற்படி தெரிவித்தார். (ஒ.5)

# ஐந்தாண்டுகளும் அரசியல் களத்தில் ஆட்டம் தொடரும்!

## ஒய்வுபெறும் எண்ணம் இல்லை என்கிறார் மஹிந்த

**கொழும்பு, செப். 10**
**2022 ஆம் ஆண்டுடன் தான் அரசியலில் இருந்து ஓய்வுபெறப் போவதாக வெளியான தகவல்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ச அடியோடு நிராகரித்துள்ளார். ஐந்தாண்டுகள் பதவி வகிப்பதற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் அதற்கு முன்னரே ஓய்வுபெறும் எண்ணம் இல்லை என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச 'டெய்லிமிரர்' ஊடகத்துக்குத் தெரிவித்தார்.**

இன்னும் 2 வருடங்களில் அரசியலில் இருந்து மஹிந்த ராஜபக்ச ஓய்வுபெறுவார் எனவும், இதனால் ஏற்படும் பதவி வெற்றிடத்துக்கு மற்றுமொரு ராஜபக்ச நியமிக்கப்படவுள்ளார் எனவும் சில நாள்களுக்கு முன்னர் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே அதற்கு பிரதமர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் ஊடாக நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச, கடைசியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் குருநாகலை மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப்பெற்று வரலாற்று சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, உத்தேச அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவின் ஊடாக பிரதம அமைச்சருக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ.5,44)

## அதிபர் சேவை நியமனத்தில் அரசியல் என முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப்.11
2018 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை தரம் III நியமனம் அரசியலின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும், வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய வழங்கப்படவில்லை என்றும் இலங்கை அதிபர் சேவை III இற்கு தகைமை பெற்ற ஆசிரியர்கள் சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.
சங்க பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையே நேற்றுமுன்தினம் கடற்றொழில் அமைச்சில் சந்திப்பு ஒன்று நடந்துள்ளது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நாங்கள் இந்தப் பரீட்சையில் 3 பாடங்களுக்கு சேர்த்து ஒவ்வொரு பாடத்துக்கும் தலா 40 புள்ளிகள் எனும் அடிப்படையில் மொத்தம் 120 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தபோதும் எமக்கு நியமனம் வழங்கப்படவிலை. ஆனால் 2008-2015 ஆண்டுகளில் நடைபெற்ற பரீட்சைகளில் 120 புள்ளிகளைப் பெற்ற அனைவருக்கும் அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்திடம் முறையிட்ட போதும் எமக்கு நியாயம் கிடைக்கவில்லை என்றும் எமக்கு இந்த நியமனங்களை மீண்டும் போட்டிப் பரீட்சைகளுக்கு உட்படுத்தாமல் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் உரிய தரப்புடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ற-20)

## ஊடகவியலாளர் சடலமாக மீட்பு

கொழும்பு, செப்.11
கொழும்பிலிருந்து வெளிவரும், ஐலண்ட் ஆங்கில நாளிதழின் மூத்த ஊடகவியலாளர் சக்கி ஜாபர், நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கடந்த சில நாள்களாக காணாமல் போயிருந்த நிலையிலேயே அவர் நேற்றுமுன்தினம் சடலமாக அவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
தனியாக வசித்து வந்த ஊடகவியலாளர் சக்கி ஜாபர், கடந்த சில நாள்களாக பணிக்கு வரவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நிலையில், நேற்று அவரது வீட்டுக்குச் சென்ற உறவினர் ஒருவர், அவர் சடலமாகக் இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.
அவர் வீட்டுக்குள் உயிரிழந்து பல நாட்களாகியிருக்கும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும், அவரது மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்து இன்னமும் தகவல் வெளியாகவில்லை. (ற-இ)



## மாதிரி மனித உடற்தொகுதி அன்பளிப்பு

தண்ணீரூற்று கலைவாணி கல்வி நிலையத்துக்கு மனித உடற் பாகங்கள் அடங்கிய தொகுதி அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தில் கல்வி பயிலும் 350 மாணவர்கள் பயன்பெறும் வகையில் புலம்பெயர்ந்து வாழும் அ.புஸ்பராஜா என்பவரது பிறந்த நாளை முன்னிட்டு இது வழங்கப்பட்டுள்ளது. (வ-222)

## அமைச்சரவை கூட்ட கிழமையில் மாற்றம்

கொழும்பு, செப்.11
வாராந்த அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறும் கிழமையை மாற்ற ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தீர்மானித்துள்ளார். இதன்படி, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் திங்கட்கிழமைகளில் அமைச்சரவை கூட்டம் இடம்பெறும்.
இதுவரை புதன்கிழமைகளிலேயே அமைச்சரவை கூட்டம் நடந்து வந்தது. எனினும் புதன்கிழமைகளில் அமைச்சர்கள் பொதுமக்கள் சந்திப்புக்களிலும் ஈடுபடுவதால், இவ் அமைச்சரவை கூட்ட கிழமையை மாற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ந-இ)


## ஹெரோய்னுடன் யுவதி கைது

கொழும்பு, செப்.11
170 மில்லிகிராம் ஹெரோய்னுடன் யுவதியொருவர் நேற்றுமுன்தினம் கொட்டாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைதான யுவதி ஆறு ஆண்டுகளாக ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.
31 வயதான இந்த யுவதி, ஓய்வு பெற்ற பொலிஸ் உயரதிகாரி ஒருவரின் மகள் எனவும், இவர் ஹெரோய்னுக்கு அடிமையானவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந)

# தோட்டச் செய்கைக்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர்

## கிளிநொச்சி வைத்தியசாலை முன்மாதிரி

கிளிநொச்சி, செப்.11
கிளிநொச்சி வைத்தியசாலையில் கழிவு நீர் சுத்திகரிப்பு தொகுதி மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீர் வைத்தியசாலை வளாகத்தினுள் உள்ள தோட்டச் செய்கைக்கு பயன்படுத்தப்படுகிறது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் அந்தக் கழிவுநீர் வெளியேறி குடிமனைகளூடாகச் செல்லும் வாய்க்காலில் கலக்கின்றது என செய்திகள் வெளியாகியிருந்தன.
இந்த விடயம் வைத்தியசாலை பணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து அவரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கழிவு நீர் வைத்தியசாலை வளாகத்தில் உள்ள நீர்த் தாங்கிகளில் சேகரிக்கப்பட்டு மூன்று நிலைகளாக சுத்திகரிக்கப்பட்டு, குளோரின் இடப்பட்டு கத்தரி, தக்காளி, மிளகாய், வாழை போன்ற பயிர்கள் நாட்டப்பட்டு மீளவும் விவசாய



நடவடிக்கைக்கு பாவிக்கப்படுகின்றது.
இது தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளர் கே.இராகுலன் கருத்து தெரிவிக்கையில், கழிவுநீர் சுத்திகரிப்பு தொகுதி மீள இயங்கு நிலைக்கு கொண்டுவரப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட நீர் பயனுள்ளவகையில் பயிர்செய்கைக்கு பாவிக்கப்படுகிறது. இருந்த போதும் எமது வைத்தியசாலையின் பயன்பாடு மற்றும் வேலைப்பழு நாளாந்தம் அதிகரித்து செல்வதனால் நிரந்தரமானதும் நீடித்த திட்ட மிடலுடன் கூடியதுமான புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு தொகுதி ஒன்று அத்தியாவசியமானதாகும். மாகாண சுகாதார திணைக்களம் இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது என்று தெரிவித்தார். (வ)

# மாணவர்கள் மீது போதைப்பொருள் ஆதிக்கம்!

## அடிமையாகாதீர்கள் என்கிறார் கிளி.அரச அதிபர்



கிளிநொச்சி, செப்.11
எப்போதுமில்லாதவாறு கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மீது போதைப்பொருள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இதை நிறுத்த உங்களைப் போன்றவர்களால் மட்டும் தான் இதைச் செய்ய முடியும்.

எனவே இந்த போதைப்பொருளுக்கு அடிமையாகாமல் இருக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று புதன்கிழமை பாடசாலை மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகளுக்கு மின்னொளி ஊட்டும் ஸ்டிக்கர் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்படி தெரிவித்துள்ளார். மேலும், தற்போது எமது நாடு மட்டுமில்லாமல் உலக நாடுகளிலும் அச்சுறுத்தும் வகையில் கொரோனா வைரஸினால் பலர் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு எமது மாவட்டத்தில் இவ்வாறான பிரச்சினைகள் இல்லாவிடினும் அது தொடர்பான விழிப்புணர்வுகள் இருக்க வேண்டும் - என்றார்.

நிகழ்வில் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த சந்திரசேக கருத்துத் தெரிவிக்கும் போது, கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 3 ஆண்டுக்குள் 650 விபத்துக்கள் ஏற்பட்டு, அதில் சுமார் 137 பேர் பலியாகி உள்ளார்கள் அதிலும் அதிக கூடியவர்கள் இளைஞர்களே. எனவே வீதி விபத்துக்களைத் தடுப்பது வீதிப் போக்குவரத்து பொலிஸாரால் மட்டும் முடியாது உங்களைப் போன்றவர்கள் ஏனையவர்களுக்கும் தெரிவிக்கும்போது ஓரளவேனும் விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவித்துள்ளார். நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கமலராஜ், அறிவியல் நகர் ஆடைத் தொழிற்சாலையில் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள். (ந-214)

# ஹெரோய்ன் விற்பனை: சந்தேகநபர் கைது

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாளையடி பண்டத்தரிப்பு பகுதியில் 30 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதான சந்தேகநபர் ஒருவரை காங்கேசன்துறை விசேட புலனாய்வு பொலிஸார் தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் என இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கைது நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய கைதான சந்தேகநபரை சோதனைக்கு உட்படுத்தியபோது அவரது உடைமையில் ஹெரோய்ன் போதைப்பொருள் இருந்தமை தெரியவந்துள்ளது.


கைதான நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த இளவாலை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-25)

# தேங்காய் விலை திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.11
யாழ்ப்பாணக் குடாநாட்டில் தேங்காயின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. இந்தத் திடீர் அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தேங்காய் ஒன்று 80 ரூபா முதல் 100 ரூபா வரையில் விற்கப்படுவதால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம், திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை போன்ற சந்தைகளுக்கு தேங்காய்களின் வருகையும் மிகக் குறைந்தே காணப்படுகின்றன.

புத்தளத்திலிருந்து அதிகளவு தேங்காய்கள் வடக்குக்கு இறக்குமதி செய்யப்பட்டு வந்தாலும், அவற்றின் விலை அதிகரித்தே காணப்படுகின்றது. (ந-17)



# க.பொ.த மாணவர்களுக்கு செயலட்டைகள் வழங்கல்

2020ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் பரீட்சை அடைவினை முன்னேற்றுவதற்கான செயலட்டைகள் பிரதேச பாடசாலைகளுக்கு வழங்கும் நிகழ்வு ஓட்டமாவடி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்காக கோறளைப்பற்று மேற்கு கல்வி மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் அமைப்பின் தலைவருமான வி.ரி. அஜ்மீர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. அஹ்ஷாப், பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் அதிபர்களும், கல்குடா ஸக்காத் நிதியத்தின் அங்கத்தவர்களும், கோறளைப்பற்று மேற்கு கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி சபை அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். (ந-150)

# கசிப்பு வைத்திருந்தவருக்கு ரூ.20 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி, செப்.11
சட்ட விரோதமாக கசிப்பு உடைமையில் வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன் போதே இந்த நபருக்கு மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. (ந-9)




# குற்றவாளிகளின் சொர்க்க பூமி

வேலியே பயிரை மேய்வது போல் போதைப்பொருள் தடுப்பு பிரிவைச் சேர்ந்த பல பிரதானிகளே போதைப் பொருள் வியாபாரத்தின் பங்காளிகளாகவும் பாதுகாவலர்களாகவும் செயற்பட்டுள்ளனர் என்ற தகவல் அண்மையில் வெளியாகி, பொதுமக்கள் மத்தியில் பாதுகாப்புத் துறையினர் மீதான நம்பிக்கையை இல்லாமலாக்கியுள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன் வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது பதவியையும் அதிகாரத்தையும் கையில் எடுத்துக் கொண்டு போதைப்பொருள் சாம்ராஜ்யத்தையே நடத்தினார். இவருடைய ஆடம்பர மாளிகை முற்றுகையிடப்பட்டபோது பல கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்ன் மற்றும் பெருந்தொகையான பணம் என்பனகைப்பற்றப்பட்டன. பொலிஸ் பிரதானியின் பாதுகாப்புடன் செயற்பட்ட பாதாளக் கோஷ்டியினரும் மடக்கிப் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இது பழைய கதை என்றாலும் போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்தில் பொலிஸார் தொடர்பு வைத்திருப்பது காலம் காலமாகவே தொடரும் ஒன்றுதான்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியான பின் நேரடியாக போதைப்பொருள் கடத்தல், லஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக சற்று இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பல பெரும்புள்ளிகள் கைது வலையின் சிக்கினர். இதனால் சகோதரர்களாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்சவுக்கும் இடையில் சிறு முறுகல்நிலையும் ஏற்பட்டிருந்தது.

அரசியலில் கோத்தாபய சர்வாதிகாரி போன்று தன்னிச்சையாகச் செயற்படுவதில் மக்கள் அதிருப்தி அடைந்தாலும் கூட போதைப்பொருள் கடத்தல் விவகாரத்தில் அவர் மேற்கொள்ளும் அதிரடி நடவடிக்கைகள் வரவேற்கப்பட்டன.

போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் பல அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பல ஆயிரம் கோடி பெறுமதியான போதைப் பொருள்களும் பெருந்தொகையான பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த அதிரடி நடவடிக்கைள் பாதாள உலகக் கிரிமினல்கள் மத்தியிலும் கொலை, கொள்ளை, சூத்திரதாரிகளின் மத்தியிலும் கிலியை ஏற்படுத்தி இருந்தன.

ஆனால் கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சரித்திர முக்கியத்துவமான சம்பவம் இவர்களுக்கு மீண்டும் தெம்பைக் கொடுத்துள்ளது. தொடர் கைதுகளால் சற்றுத் தளர்ந்து போயிருந்தவர்கள் மீண்டும் தைரியமாக சட்ட விரோதகாரியங்களில் இறங்க முடிவெடுத்துவிட்டனர். பல வருடங்கள் விசாரணைகள் நடத்தப்பட்டு சகல தரப்பினர்களின் சாட்சியங்களையும் ஆதாரங்களையும் அடிப்படையாகக்கொண்டு கொலைக்குற்றம் சுமத்தப்பட்ட பிரேமலால் ஜயசேகர குற்றவாளி என்பதை உறுதிப்படுத்தி, இரத்தினபுரி மேல் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருந்தது.

இவ்வாறு கொலையாளி என ஊர்ஜிதப்படுத்தபட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரேமலால் ஜயசேகர பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு ஓர் உறுப்பினராகத் தெரிவாகி சத்தியப்பிரமாணம் செய்துகொண்டு மக்கள் பிரதிநிதிகள் அனுபவிக்கும் சகல சலுகைகளும் அனுபவிக்க முடியும். இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது கூட, கோத்தாபய ஜனாதிபதியாக வந்த பின்னரே என்பது குறிப்பிடத்தக்கது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் நாடாளுமன்றத்துக்கு வரமுடியும் என்றால் எமக்கு என்ன மரண தண்டனை, ஆயுள் தண்டனை 10-15 வருட சிறைத் தண்டனைதானே கிடைக்கப்பெற்றாலும் வெளியே வந்துவிடலாம் என்ற தைரியத்தோடு, மீண்டும் சட்ட விரோத காரியங்கள் களைகட்டியுள்ளன . இனி இலங்கை குற்றவாளிகளின் சொர்க்க பூமியாகினாலும் ஆச்சரியமில்லை.

- சிகா



# இன்றைய நாள்

**மேடம்:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். திடீர்ப் பணவரவு மகிழ்ச்சி தரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** அமைதியான நாள். மகிழ்ச்சி தரும் செலவு செய்வீர்கள். நண்பருடன் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சவாலான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்:** சகோதரர்களுக்காகச் செலவு செய்யும் நாள். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். முயற்சிகளுக்கான வெற்றிகள் மகிழ்ச்சி தரும். தன்னம்பிக்கை கூடும்.

**கடகம்:** சிறப்பான நாள். முயற்சிகளில் பலனடைவீர்கள். புதிய தோழியின் நட்பால் உற்சாகம் ஏற்படும். வீடு வாங்கும் விருப்பம் நிறைவேறும். சொத்துத் தகராறு செய்து கொண்டிருந்த உறவினருக்கு நன்மை செய்வதால் பகை தீரும்.

**சிம்மம்:** மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். குடும்பத்தினர்ஒத்துழைப்பால்துன்பம்தீரும். தனலாபம் அதிகரிக்கும். முயற்சிகளில் ஓரளவு வெற்றி கிட்டும். குழந்தைகளால் பெருமிதம் உண்டாகும்.

**கன்னி:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அன்பு இருக்கும். காதலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மகிழ்ச்சியான தினம். மாமன் வழியில் செலவுகள் ஏற்படும்.

**துலாம்:** நேற்றைய சிரமங்கள் தீரும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத் துணையுடன் வருத்தம் ஏற்படக்கூடும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவு ஏற்படும்.

**விருச்சிகம்:** கடுமையான நாள். வழக்கு விவகாரங்களை ஒத்திப் போடுவது நல்லது. நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும். பழி ஏற்படாதபடி நடந்துகொள்ளுங்கள்.

**தனுசு:** நன்மைகள் நிகழும் நாள். உறவினர் உதவியால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். பெண்களுக்குப் பொறுமை காரணமாக நல்ல பலன் உண்டு.

**மகரம்:** செலவுகளில் கட்டுப்பாடு தேவை. வாழ்வில் முன்னேற அதிகப்படியான வாய்ப்புகள் கிடைக்கும். உறவினர்கள் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள்.

**கும்பம்:** மன நிம்மதி குறையும் நாள். வீட்டில் பொருள்களை மிகுந்த பாதுகாப்புடன் வைத்தால் இழப்பைத் தவிர்க்கலாம். இன்றைய கவலைகள் இன்றோடு தீரும்.

**மீனம்:** சோர்வான நாள். கணவர் நலத்தில் அக்கறை தேவை. பணியாளர்கள் மேலதிகாரிகளிடம் பணிவுடன் நடந்து பலன் அடைவீர்கள். முக்கிய வேலைகளைத் தள்ளிப்போட வேண்டாம்.

# இனிவரும் மாதங்களில் டெங்கின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் அபாயம்

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் டெங்கின் தாக்கமானது தற்போது குறைவடைந்தாலும் அடுத்து வரும் மாதங்களில் அதன் தாக்கம் அதிகரிக்கக் கூடும் ஆகையால் மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று சுகாதாரப் பிரிவு எச்சரித்துள்ளது.



இது தொடர்பில் சுகாதாரப் பிரிவு மேலும் தெரிவித்ததாவது.

இந்தத் தாக்கத்தைக் குறைப்பதற்கு மக்கள் முன்னெச்சரிக்கையாக தமது குடியிருப்பு சுற்றுச்சூழல்களைத், தொடர்ந்து துப்புரவாக வைத்திருக்க வேண்டும். இதற்கான சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குடியிருப்பாளர்கள் அனைவரும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் ஆறு பேர் வரையில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாநகர பிரதேசத்தில் இதன் தாக்கம் குறைவாக இருந்தாலும் கூட மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் டெங்கின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற-17)

காலாவதியான சோடாக்கள்:

# உணவக உரிமையாளருக்கு ஒரு லட்சத்து 15,000 அபராதம்

வலி தென்மேற்கு, செப்.11

திகதி காலாவதியான சோடாப்போத்தல்களை விற்பனைக்கு வைத்திருந்த உணவக உரிமையாளருக்கு ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் கைப்பற்றப்பட்ட சோடாப் போத்தல்களை அழிக்குமாறும் உத்தரவிட்டார்.

யாழ்.மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் கடந்த ஜூலை மாதம் ஆறாம் திகதி யாழ். நகர் பஸ் நிலையத்திற்குப் பின்புறமாக மின்சார நிலைய வீதியில் உள்ள சைவ உணவகத்தை சோதனைக்கு உட்படுத்தியபோது திகதி காலாவதியான 234 சோடாப் போத்தல்கள் இருந்தமையையும் உணவகம் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்குவதையும் அவதானித்துள்ளார்.

இதையடுத்து உணவக உரிமையாளருக்கு எதிராக யாழ். மேலதிக நீதிமன்றத்தில் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்கு விசாரணையின்போது சுகாதார சீர்கேடு சம்பந்தமான வழக்கில் குற்றத்தை ஏற்றுக்கொண்ட உணவக உரிமையாளர் சோடாப் போத்தல்கள் சம்பந்தமான வழக்கில் குற்றத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

இந்நிலையில் 10 குற்றச்சாட்டுகளுடன் தாக்கல் செய்யப்பட்ட சுகாதார சீர்கேடு சம்பந்தமான வழக்கில் உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் சோடாப் போத்தல்கள் சம்பந்தமான வழக்கு விசாரணையை மேலதிக விசாரணைக்காக ஒத்தி வைத்திருந்தார்.

மூன்று தவணைகளாக நடைபெற்று வந்த இவ் வழக்கு மீண்டும் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் சான்றுப் பொருளாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 234 சோடா போத்தல்களையும் அழிக்குமாறு உத்தரவிட்டார். (ந-115)

# தொண்டைமானாறு தவணை மதிப்பீட்டு பரீட்சை 28ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.11

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனு சரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தவணை மதிப்பீட்டுப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அதன்படி, 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8மணிக்கு வரலாறு தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம், முற்பகல் 11.45 க்கு சித்திரகலை 1, நாட்டியம் (பரதம்) , சங்கீதம் (கர்நாடகம்) ஆகிய பரீட்சைகளும், 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு பொது ஆங்கிலம், 11.45 க்கு தொடர்பாடல் கற்கையும் ஊடகக் கல்வியும், சித்திரக் கலை 111 ஆகிய பரீட்சைகளும்,

29ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு இணைந்த கணிதம் உயிரியல் பொருளியல் முற்பகல் 11.45 க்கு இந்து நாகரிகம், இந்து சமயம், கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரீகம் ஆகிய பரீட்சைகளும்,. ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வணிகக் கல்வி பௌதீகவியல், அரசியல் விஞ்ஞானம், முற்பகல் 11.45 க்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், மனைப் பொருளியல் ஆகிய பரீட்சைகளும், 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தமிழ், கணக்கீடு, இரசாயனவியல், முற்பகல் 11.45 க்கு பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம், அளவையியலும் விஞ்ஞான முறையும் ஆகிய பரீட்சைகளும், 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 8.00 மணிக்கு புவியியல் 11.45 மணிக்கு பொதுத் தகவல் தொழில் நுட்பம் என்பனவும்,

7ஆம் திகதி புதன்கிழமை காலை 8மணிக்கு பொது சாதாரண பரீட்சையும் 11.45 க்கு நாடகமும் அரங்கியலும் என்பனவும், 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விவசாய விஞ்ஞானம், 11.45 க்கு சித்திரக்கலை என்பனவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-159)

# மீண்டும் பஸ் முந்துரிமை வீதி முறை

கொழும்பு, செப்.11

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பஸ் முந்துரிமை வீதி முறை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த முறையை எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தவுள்ளனர். வாகன நெரிசலை குறைப்பதற்காகவே இந்த பஸ் முந்துரிமை வீதி முறை மீண்டும் முன்னெடுக்கப்ப டவுள்ளது. (ற-இ)

# 5000 குளங்கள் விரைவில் சீரமைப்பு

கொழும்பு,செப்.11

**புராதன தொழிநுட்பம் மற்றும் நவீன விஞ்ஞான பொறிமுறைகளின் ஊடாக நாடு முழுவதும் 5,000 குளங்கள் உடனடியாக சீரமைக்கப்படவுள்ளன. அத்துடன் நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டுள்ள 1,20,000 ஏக்கர் வயல் நிலப்பரப்பில் 'தேசிய உணவு உற்பத்தி பங்களிப்பு வேலைத்திட்டம்' நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.**

கிராமிய வயல்கள் சார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; நீர்ப்பாசன கட்டமைப்பின் மூலம் இயங்குகின்ற விவசாயக் காணி பயன்பாடு தொடர்பாக காணி உபயோகத் திணைக்களம் மற்றும் கமத்தொழில் திணைக்களம் ஒன்றிணைந்து கணக்கெடுப்பு ஒன்றைச் செய்துள்ளது. இதன் மூலம் கண்டறியப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு சிறப்பான முறையில் நீரை முகாமைத்துவம் செய்து ஏனைய போகங்களில் இனங்காணப்பட்ட 17 வகையான பயிரினங்களை பயிரிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் 1500 கிராமிய குளங்கள் சார்ந்த 80 ஆயிரம் ஹெக்டேயர் பயிர் நிலங்களில் இரு போகங்களிலும் பயிரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள நீர்ப்பாசன கட்டமைப்பு மற்றும் ஆறுகளை அண்டிய பகுதியில் உள்ள வன ஒதுக்கீடுகளை ஆறு மாதங்களுக்குள் வர்த்தமானி மூலம் அறிவிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வன ஒதுக்கீடுகளுக்குள் உள்ள 500 சிறியளவிலான குளங்களை மிருகங்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் சீரமைக்கப்படவுள்ளன.

நீர்ப்பாசனத் துறையில் நீண்டகாலமாக நிலவி வருகின்ற பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள் வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்புவதன் அவசியம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

புதிய விவசாய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இளம் தொழில் முயற்சியாளர்கள் 500 பேரை சேதனப் பசளை விவசாயத்துக்கு ஈடுபடுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.-என்றுள்ளது. (ஐ)

## இலங்கை கடற்பரப்பில் இருந்து விபத்துக்குள்ளான கப்பலை அகற்றுமாறு கோரிக்கை

தீ விபத்துக்குள்ளான நியூ டயமன்ட் கப்பலை இலங்கையின் கடற்பரப்பில் இருந்து உடனடியாக அகற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளதாக கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகம் நேற்று தெரிவித்துள்ளது.


சட்டமா அதிபரின் அறிவுரைக்கு அமைய இந்த அறிவிப்பு விடுக்கப்படவுள்ளதாக குறித்த ஆணையகத்தின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லங்கதபுர தெரிவித்தார்.

இலங்கைக்கு கிழக்கே சங்கமன்கண்டி இறங்குதுறையில் 38 கடல் மைல்கள் தொலைவில் எம்.டி. நியூ டயமன்ட் என்ற எண்ணெய் தாங்கிக் கப்பல் கடந்த வாரம் தீ விபத்துக்குள்ளாகியது தெரிந்ததே. (ஐ)

## சிற்றுண்டிக்குள் விநோத முட்டை

### விசாரணை ஆரம்பம்

வவுனியா, செப்.11



வவுனியாவில் உணவகமொன்றின் சிற்றுண்டிக்குள் (முட்டை ரோல்) பாவனைக்கு ஒவ்வாத விநோத முட்டை நுகர்வோரால் இனங்காணப்பட்டு வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

வவுனியா பஜார் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை ஒன்றிலேயே நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தேநீர் அருந்தச் சென்ற வாடிக்கையாளர்களுக்கு சுடச்சுட சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன.

அந்த சிற்றுண்டிக்குள் இருந்த முட்டை றப்பர் போன்று காணப்பட்டதுடன் அதன் இயல்பும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தமையை உணர்ந்த வாடிக்கையாளர்கள் வவுனியா நகரசபையின் பொது சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்தல் வழங்கினர்.

இந்த சிற்றுண்டிச்சாலைக்கு விரைந்த பரிசோதகர் நீண்ட ஆய்வின் பின்னர் அந்த சிற்றுண்டிகளை கையகப்படுத்தி மேலதிக நடவடிக்கைகளுக்காக எடுத்துச் சென்றுள்ளார்.

வாடிக்கையாளர்கள் தாம் உட்கொண்ட சிற்றுண்டியின் உள்ளிருக்கும் முட்டையின் குறைபாட்டை உணவகத்தின் உரிமையாளருக்கு சுட்டிக்காட்டினர்.

அதை பொருட்படுத்தாத உரிமையாளர் சிற்றுண்டிக்கான பணத்தை அறவிட்டு ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் பரிமாறமுற்பட்டமையை தொடர்ந்தே பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு முறையிடப்பட்டுள்ளது என வாடிக்கையாளர்களால் தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)

## சங்காபிஷேகம்

சுன்னாகம்,செப்.11

யாழ்ப்பாணம்சுன்னாகம்மயிலணிமுத்துமாரியம்மன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணி முதல் ஹோமங்கள்,சங்காபிஷேகம் மற்றும் உபசாரபூசைகள் என்பன நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நடமாடும் சேவை இல்லை சாரதி அனுமதிப்பத்திரம்;

நடமாடும் சேவை ஊடாக சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பங்களை பெறுகின்ற நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளன என யாழ்ப்பாண மாவட்ட சாரதி பாடசாலைகளின் உரிமையாளர் அமைப்பு அறிவித்துள்ளது.

நடமாடும் சேவையூடாக சில ஏமாற்று வேலைகள் இடம்பெற்றுவருகின்றன. இதனைத் தவிர்க்கும் முகமாக மக்களின் நலன்கருதி நடமாடும் சேவை ஊடாக சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்களைப் பெறுகின்ற நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இவ்வாறான விண்ணப்பப்படிவங்களை விநியோகிப்பதற்கு எந்தவிதமான முகவர்களும் இல்லை.

எனவே மக்கள் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக அவர்களிடம் பணம் கட்டி ஏமாற வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ



## வீதி சீரமைப்பு துரிதம்

வவுனியா,செப்.11

வவுனியா மன்னார் பிரதான வீதியின் சீரமைப்புப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக சீரமைப்பு இன்றிக் காணப்பட்ட இவ் வீதியூடாக மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் சிரமத்தை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் தற்போது இந்த வீதியின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெளுக்குளம் தொடக்கம் பறையனாலன் குளம் வரையான சுமார் 30 கிலோ மீற்றர் வீதி சீரமைப்புச் செய்யப்படுகின்றது. (ஐ)

## தீர்வுக்கான பொறிமுறை இராஜதந்திரம் தமிழர் தரப்பில் இன்றுவரை இல்லை

### மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

தமிழர்களின் மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுக்க முள்ளிவாய்க்கால் போர் முடிவுக்கு பின்னர், கட்டமைக்கப்பட்ட பொறிமுறை இராஜதந்திரம் முறையாக வகுக்கப்பட்டு கையாளப்படவில்லை. இது தமிழர் தரப்பின் பலவீனமான பக்கமாகவே இன்று வரை தொடர்கிறது என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவித்தார்.


அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

2009 ஆம் ஆண்டுக்கு முன்பு விடுதலைப் புலிகள் போராட்டம் மூலம் பொறிமுறை நகர்வுகளை மேற்கொண்டனர்.

ஆனால் இராஜதந்திர வியூகங்கள் அரசியல் ரீதியாக கையாளப்படாமையால் அதன் அறுவடையைப் பெற முடியாது மௌனிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் தீர்வை வலியுறுத்துவதற்கான வியூகங்கள் சம நேரத்தில் கூட்டாக கையாளப்படவில்லை. அதற்கான பொறிமுறை கூட்டாக உருவாக்கப்படாமை மிதவாத தலைவர்களின் சாணக்கிய தோல்வியாகும்.-என்றார். (ஐ-20)



எழுதுமட்டுவாழ் மருதங்குளம் பிள்ளையார் ஆலய புதிய சித்திரத்தேருக்கான ஆரம்ப வேலைகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. (ஐ-159)





## சைக்கிள்கள் கையளிப்பு

கொடிகாமம்,செப். 11
கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் 2022 ஆம் ஆண்டு கலைப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவருக்கு சைக்கிள்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கல்லூரியின் பொன்சபாபதி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிரதி அதிபர் மு.பிறேம்குமார் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியின் 2017 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வணிகப் பிரிவு மாணவி சூரியகுமார் அனுசியா தனது தந்தையின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்த உதவியை வழங்கியுள்ளார். (ஐ-159)

### இலங்கையில் 40 ஆண்டுகளில்

# சுமார் ஒரு லட்சம் பேர் வரை காணாமல் ஆக்கப்பட்டனர்

கொழும்பு,செப்.11
**இலங்கையில் 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னரான கடந்த 40 வருடங்களில் சுமார் ஒரு லட்சம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்று கனடா நாட்டின் கொன்சர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கார்னெட் ஜெனுயிஸ் தெரிவித்தார்.**

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கோரி கனடாவில் தமிழர்களால் முன்னெடுக்கப்படும் நீண்ட நடைபவனிக்கு ஆதரவு தெரிவித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் , கடத்தல் என்பன சர்வதேச உலகம் முழுவதிலும் பல நாடுகளிலும் சமூகங்களிலும் முக்கியமான ஒரு மனித உரிமைப் பிரச்சினையாக உள்ளன. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கை முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்றாக உள்ளது. இது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் நடவடிக்கை எடுக்குமாறு கனேடிய அரசாங்கத்தைக் கேட்பதற்காக ரொறொன்ரோவிலிருந்து ஓட்டோவாவுக்கும், கியூபெக்கிலிருந்து ஓட்டாவாவுக்கும் நடைபயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையிலும் உலக நாடுகளிலும் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என எமது கொன்சர்வேட்டிவ் கட்சி கோரி வந்திருக்கின்றது.

இவற்றுக்கு எல்லாம் கனேடிய அரசாங்கத்திடமிருந்து நல்ல பதில் கிடைக்கும் என நம்புகின்றேன்'-என்றார். (ஐ-இ)

## பொலிஸுக்கு டிமிக்கி விட்ட பெண்ணின் வாகனம் பறிப்பு

யாழ்ப்பாணம், செப்.11
போக்குவரத்து பொலிஸாரை ஏமாற்றி தப்பிக்க நினைத்த பெண் ஒருவரின் மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வல்லை முனியப்பர் கோயிலுக்கு அருகாமையில் நடைபெற்றது.

அச்சுவேலி பகுதியினூடாக மோட்டார் சைக்கிளில் பெண் ஒருவர் பயணித்துள்ளார்.

போக்குவரத்து கடமையில் ஈடுபட்ட பொலிஸார் மறித்தபோதும் நிற்காமல் மோட்டார் சைக்கிளில் வேகமாக பயணித்துள்ளார்.

கடமையில் ஈடுபட்ட பொலிஸார் அந்த பெண்ணை துரத்தி வழி மறித்து, நிற்காமல் சென்றதுக்கான காரணத்தை வினவினர். அதன் பின்னரே சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமை பயணித்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பெண்ணின் மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-422)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனிதம் அமைப்பினரால் ஆனைக்கோட்டை ஜே/133 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு மரக்கறிக்கன்றுகளும்,விதைகளும் நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டன. (ஐ)

### பெருந்தோட்டத்துறையை

# தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்து வழங்க வேண்டும்

### வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

பெருந்தோட்டத்துறையை தோட்டத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கி, வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பு இருந்தே நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக பெருந்தோட்டத்துறையே திகழ்ந்தது.

ஆனாலும் அன்று முதல் இன்றுவரை இந்த நாட்டை ஆண்டுள்ள அரசாங்கங்கள் பெருந்தோட்டத்துறைமீது உரிய கவனம் செலுத்தவில்லை.

பொருளாதாரத்தை தாங்கி நின்றாலும், இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்பதுபோல வெவ்வேறு துறைகள்மீதே கவனம் செலுத்தப்பட்டது. இதன்காரணமாகவே பெருந்தோட்டத்துறை வீழ்ச்சியை நோக்கி நகர்ந்தது. அது நாட்டு பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.-என்றார். (ஐ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகள் வழங்க வேண்டும்

### மனோ கணேசன் கோரிக்கை

தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் முகநூலில் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் முகநூல் பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது,

நட்டமடையும் தோட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி அக்கறை காட்டுவது நல்லது. அவற்றைச் சிறு தோட்டங்களாக பயிர்ச் செய்கைக்காகவும், இரத்தினக்கல் அகழ்வுக்காகவும் காணி பிரித்து வழங்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளமை நல்லதே. ஆனால் காணிகள் பிரித்து வழங்கப்படும் போது, தோட்டத் தொழில் துறையில் பெரும் தொழில் நேர்த்தி அனுபவம் கொண்ட தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும். இந்தப் புதிய மாற்றத்தினால் தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட எஜமானர்களுக்கு கொத்தடிமைகளாக இருக்க முடியாது. இதை கவனத்தில் கொள்வது அரசின் உள்ளே இருப்பவர்களின் கடப்பாடு எனப் பதிவிட்டுள்ளார். (வ-இ)

# விபத்தை தடுக்க கடவை அமைக்குமாறு கோரிக்கை

வவுனியா,செப்.11
வவுனியா வேப்பங்குளம் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக பாதசாரிக் கடவை இன்றி தினமும் விபத்துக்கள் இடம்பெறுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இதனைத் தடுப்பதற்கு சமுர்த்தி வங்கிக்கு முன்பாக பாதசாரிக்கடவை அமைத்துத்தருமாறு சமுர்த்திப் பயனாளர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா மன்னார் பிரதான வீதியிலுள்ள சமுர்த்தி வங்கிக்கு கணேசபுரம் , கூமாங்குளம் , ஈச்சங்குளம் , வைரவப்புளியங்குளத்தை உள்ளடக்கிய 16 கிராம அலுவலகர் பிரிவுகளிலுள்ள சமுர்த்திப் பயனாளர்கள் தினமும் சுமார் 150 பேர் வரை வந்து செல்கின்றனர் .

பிரதான வீதியைக் கடந்து வங்கிக்குச் செல்ல முற்படும்போது முச்சந்தியிலிருந்தும் மூன்று திசைகளிலிருந்து வரும் வாகனங்களுடன் மோதி பலர் தினமும் காயமடைந்து வருகின்றனர் .

நேற்றும் இரு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. எனவே இதனை கருத்திக்கொண்டு விரைவில் பாதசாரிக் கடவையை அமைத்துத்தருமாறு பயனாளிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-110)

## அன்னலட்சுமியின் நினைவு நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.11
கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவு நாளும் நினைவுப் பேருரையும் இன்று முற்பகல் 10 மணிக்கு வாழ்வக நிறுவனத்தின் செல்லா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் கௌரவ விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்துகொள்ளவுள்ளார்.

நினைவுப் பேருரை செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் ஆற்றவுள்ளார்.

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டத்தின் கீழ் வறிய மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## 20ஆவது திருத்தம்

# நான்கு விடயங்களை பெரும் ஆபத்துக்குள்ளாக்கியுள்ளது

### பரந்த கலந்துரையாடலுக்கு வலியுறுத்துகிறது ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெசனல் அமைப்பு

கொழும்பு, செப். 11

**அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ள விடயங்கள், தகவலறியும் உரிமைச்சட்டம், பொதுச்செலவீனங்கள் மீதான கண்காணிப்பு, இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணைகள், சுயாதீனமான தேர்தல்கள் ஆகிய முக்கியத்துவமுடைய விடயங்களில் பெருமளவுக்குத் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இவைபற்றி முதலில் நாட்டு மக்கள் தெளிவடைவதுடன் இதுகுறித்த விரிவான கலந்துரையாடலொன்றும் இடம்பெற வேண்டியது அவசியமாகும் என்று ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெசனல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஒபேசேகர தெரிவித்தார்.**



கொழும்பிலுள்ள அந்த அமைப்பின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த ஜனநாயகக் கட்டமைப்புக்களின் மீது குறித்தளவான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையை உருவாகியிருக்கின்றது. எனவே இதுபற்றி மக்கள் தெளிவு பெறுவதுடன் விரிவான பகிரங்க கலந்துரையாடலொன்றும் இடம்பெற வேண்டியது அவசியமானதாக மாறியிருக்கிறது. இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதை முன்நிறுத்தி செயற்பட்டுவரும் எமது அமைப்பு, அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில்பிரதானமாக 4 விடயங்கள் மீது அவதானம் செலுத்தியிருக்கின்றது.

**தகவலுக்கான உரிமை**

தகவல் அறியும் உரிமை அரசமைப்புக்குள் மேன்மையானதாக இருக்கும் என உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும், முன்மொழியப்பட்டுள்ள 20ஆம் திருத்தமானது, தகவல் அறியும் உரிமைக் கட்டமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தும். ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரம் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினூடாக அரசமைப்புப் பேரவைக்கே வழங்கப்பட்டுள்ளது. எனினும் முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்புத் திருத்தமானது அரசமைப்புப் பேரவையை நீக்கியுள்ளதோடு, நாடாளுமன்றப் பேரவையின் வரையறுக்கப்பட்ட நோக்கு மற்றும் அதிகாரங்களோடு பரிந்துரைகளை வழங்க முடியாத நிலையானது தகவலுக்கான உரிமைச் சட்ட செயற்பாட்டை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது.

**ஊழல் தொடர்பான விசாரணை**

முன்மொழியப்பட்டுள்ள 20ஆவது திருத்தத்தின் மூலம் அரசமைப்பின் 156 அ பிரிவை ரத்து செய்வது குறித்தும் கவனத்தில் கொள்கின்றோம். இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் சட்டரீதியான அங்கீகாரத்தை பலவீனப்படுத்துவதோடு, 19ஆவது திருத்த சட்டத்தில் வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் சொந்த பிரேரணை மீது சுயமாக விசாரணைகளை ஆரம்பிக்கும் அதிகாரத்தை 156 அ பிரிவை நீக்குவதன் ஊடாக ரத்து செய்துள்ளது.

சட்டத்தை நிலைநாட்டும் அதிகார சபைகள் மக்கள் முறைப்பாடுகளைச் செய்யும் வரை அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காத்திருப்பதானது நீண்ட காலமாகவே மக்கள் மத்தியில் மனக்குறையாக உள்ளது. முறைப்பாடுகள் இல்லாமல் சுயமாக விசாரணைகளை மேற்கொள்வதற்கான செயல்திறன் மிக்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரத்தை இல்லாமல் செய்வதானது ஊழலை எதிர்த்து போராடுவதற்கான அரசின் அர்ப்பணிப்பு குறித்து மக்கள் மத்தியில் எதிர்மறையான செய்தியையே வழங்கியுள்ளது.

**பொதுநிதி தொடர்பான கண்காணிப்பு**

20ஆவது திருத்தம் ஊடாக அரசின் பொதுச் செலவுகள் தொடர்பாக பிரதானமான மேற்பார்வை செய்யும் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்முதல் ஆணைக்குழு என்பவற்றையும் நீக்கியுள்ளது. கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு தொடர்பான ஏதாவதொரு விடயத்தை நீக்கினாலும் அந்த ஆணைக்குழுவின் சட்டம் இயல்பாகவே செயல் இழந்துவிடும். அரசுக்கு ஏதேனும் இழப்பை ஏற்படுத்தும் பொது அதிகாரிகளிடமிருந்து இழப்புகளை மீட்டெடுக்கும் திறன் போன்ற குறிப்பிடத்தக்க அதிகாரங்கள் தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவை நீக்குவதானது இப்படியான அத்தியாவசிய அதிகாரங்கள் கூட செயல் இழந்து விட காரணமாகின்றது.

மேலும், தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் கட்டளைகள் (விதிமுறைகள்) முழுமையாக செயல்படவில்லை என்றாலும் ஒரு வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வைக் கொண்டமைந்த கொள்முதல் கட்டமைப்பை உறுதி செய்வதற்கு இந்த ஆணைக்குழுவின் இருப்பு முக்கியமானது என்றும் கூறினார். தேசிய கொள்வனவு என்பது ஊழல் அதிகம் நிகழ்வதற்கு சாதகமான ஒரு செயற்பாடாகும்.

ஊழலை ஒழிப்பதற்கும் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபன பரப்புரையில் தனது சொந்த உறுதிப்பாட்டின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் அதே வேளையில் அந்த உறுதிப்பாட்டை நிலைநாட்டுவதற்கு சுயாதீன தேசிய கொள்வனவு ஆணைக்குழுவின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளுமாறு அரசை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

**சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்**

முன்மொழியப்பட்டுள்ள 20 திருத்தமானது, இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களையும் மட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது. தேர்தல் காலங்களில் பொதுச் சொத்துக்களின் துஷ்பிரயோகத்தை தடுக்கும் நடவடிக்கை தொடர்பாக ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் இதனூடாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. 20வது திருத்தமானது ஆணைக்குழுவால் வழங்கப்படுகின்ற விதிமுறைகளின் வரம்பையும் கட்டுப்படுத்துகின்றது. 'பகிரங்க சேவை தொடர்பான ஏதேனும் விடயங்கள்' தொடர்பான கட்டுப்பாடு மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புகூறலானது எதிர்காலத்தில் தேர்தல்களின் நேர்மைத் தன்மை குறித்தும் கேள்விக்குட்படுத்துவதாக உள்ளது.

இறுதியாக, முன்மொழியப்பட்டுள்ள 20ஆவது திருத்தமானது நடைமுறையிலுள்ள கண்காணிப்பு மற்றும் பொறுப்புகூறலின் பொறிமுறை கட்டமைப்பில் அரசமைப்பில் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (ஒ.5)

---

## கோத்தாபயவின் அரசுக்கு பெரும்பான்மை கிடையாது

*எதிர்க்கட்சி உறுப்பினர் மரிக்கார் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 11

அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதாக மாயை ஒன்றை அரசாங்கம் காட்டிக் கொண்டிருக்கின்றது. முட்டுக்கொடுக்கும் நான்கு பேர் அடங்கலாக 148 பேரே அரசாங்கத்துடன் இருக்கின்றனர் என எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார். நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது: சபாநாயகருக்கு என்று மக்களிடையே கௌரவமொன்று இருக்கின்றது. ஆனால் நீங்கள் தற்போது அழுத்தத்துடனேயே இருக்கின்றீர்கள் என்பது எங்களுக்கு தெரிகின்றது. அழுத்தங்களுக்கு அடிபணியாது, சுயாதீனமான சபாநாயகராக பணிகளைச் செய்யுமாறு நாங்கள் கேட்கின்றோம். நீங்கள் ஆளும் தரப்பிற்கு மத்திரமல்ல முழு நாடாளுமன்றத்திற்கும் சபாநாயகராகவே இருக்கின்றீர்கள். அத்துடன் இந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை. மூன்றில் இரண்டு இருப்பதைப் போன்று மாயை காட்டுகின்றனர். அரசுக்கு 58.9 வீதமே வாக்குகள் கிடைத்துள் ளன. எங்கேயும் மூன்றில் இரண்டு கிடைக்கவில்லை. முட்டுக்கொடுக்கும் 4 பேர் அடங்கலாக அரசுக்கு 149 ஆசனங்களே உள்ளன. சபாநாயகரால் வாக்களிக்க முடியாது. இதன்படி 148 ஆசனங்களே அரசுக்கு உள்ளன - என்றார். (ம-இ)

---

## 13 மாவட்டங்கள் மழையால் பாதிப்பு

நாட்டில் கடந்த ஓரிரு தினங்களாக நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக 13 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. செவ்வாய்க்கிழமை இரவு முதல் நேற்று மாலை வரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் 121 மில்லி மீற்றர் என்ற அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த நான்கு நாள்களாக நிலவுகின்ற சீரற்ற காலநிலையால் 13 மாவட்டங்களில் ஆயிரத்து 715 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 732 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 17 வீடுகள் முழுமையாகவும் 554 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு முதல் பெய்யும் கடும் மழையால் கொழும்பு மாவட்டத்தின் பல வீதிகளும் நீரில் மூழ்கியிருந்தன. வெல்லம்பிட்டிய, அங்கொட, தெமட்டகொட, ஆமர்வீதி, கொழும்பு பல்கலைக் கழக வளாகம் என்பன வெள்ள நீரில் மூழ்கியிருந்தமையால் நேற்றுக் காலை குறித்த வீதிகளினூடான போக்குவரத்து முடங்கியிருந்தது. இதே வேளை மேலும் சில தினங்களுக்கு இவ்வாறான மழையுடனான காலநிலை தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தினால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதேவேளை மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடை மழை பெய்யும் என்றும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

---

## ஆயுதங்களுடன் மூவர் கைது

திக்வெல்ல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஒரு தொகை ஆயுதங்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 3 துப்பாக்கிகள், 27 தோட்டாக்கள், கத்திகள், வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்களிடம் மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-இ)

# வடக்கில் முதலீடுகளுக்கு உரிய கள ஆய்வின் பின்னர் அனுமதி

## அதிகாரிகளிடத்தில் ஆளுநர் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், செப். 11**

**உரிய கள ஆய்வுகளின் பின்னர் வடமாகாண முதலீடுகளுக்கான அனுமதிகளை அளிக்குமாறு அதிகாரிகளிடத்தில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.**

வட மாகாணத்தில் முதலீடுகள் செய்வதற்கான திட்டங்களை மெகா இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவன அதிகாரிகள் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கும் மாவட்டச் செயலர்களுக்கும் பிரதம செயலருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கும் நேற்றுமுன்தினம் ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் காட்சிப்படுத்தியிருந்தனர். இதன்போது முதலீட்டாளர்கள் ஆடை உற்பத்தி மற்றும் நட்சத்திர விடுதி அமைப்பதற்கான அனுமதிகளை அளிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.



இந்நிலையில் கருத்து வெளியிட்ட வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ், முதலீட்டாளர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஆடை உற்பத்தி நிறுவனம் மற்றும் நட்சத்திர விடுதி அமைப்பதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதோடு சிமெந்து தொழிற்சாலை போன்ற ஏனைய திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்குமாறும் குறிப்பிட்டார். அத்துடன் முதலீட்டுத்திட்டங்களுக்கான அனைத்து உதவிகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கள ஆய்விற்குப் பின்னர் வழங்குங்கள் என்றும் வலியுறுத்திக் கூறினார். (ம-இ)

## கொரோனாத் தொற்றில் அவதானம் அவசியம்!!

யாழ்ப்பாணம், செப். 11

கொரோனா பெருந்தொற்று ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும் மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மிகமிக அவதானமாக இருக்க வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அயல்நாடான இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அங்கிருந்து சிலர் கடல்வழியாக இங்கு வந்து சேரலாம். இதன் காரணத்தால் மக்கள் விழிப்பாகவும் முன்னெச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இந்தியாவில் இருந்து யாராவது இங்கே வந்தால் உடனடியாக சுகாதாரப் பிரிவினருக்கு மக்கள் அறிவிக்க வேண்டும்.

கொரோனாவின் தாக்கம் இங்கே இல்லை என்று மக்கள் அசண்டையீனமாக இருக்கக்கூடாது. முன்னெச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் செயற்பட வேண்டும். அத்துடன் மக்கள் சுகாதார நடைமுறைகளையும் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் என சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேசமயம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு விசேட கூட்டத்தில் கலந்துகொண்ட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் மேற்கண்ட கருத்தையும் முன்வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-17)



## திருமலையில் தொல்பொருள் சான்றுகள் கண்டுபிடிப்பு

திருகோணமலை, செப்.11

திருகோணமலை மாவட்டகுச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவின் திரியாய் ஆத்திக்காடு பிரதேசத்தில் தொல்பொருள் சான்றுகள் சில கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்தப் பிரதேச மக்கள் பல வருடகாலமாக பயிர் செய்யாது கைவிடப்பட்ட காணிகளைத் துப்புரவாக்கும் போதே இந்தத் தொல்பொருள் சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இது தொடர்பில், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தனவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்க அதிபர், அதிகாரிகள் சகிதம் இந்தப் பிரதேசத்துக்கு நேற்றுமுன்தினம் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டு நிலவரங்களை அவதானித்தனர்.

இதன்போது குறித்த பிரதேசத்தில் காணி உரிமங்களை உடைய பொது மக்கள் தமக்கு இந்த முறை பயிர் செய்ய அனுமதியை வழங்குமாறு அரசாங்க அதிபரிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரதேசத்தில் சில இடங்களில் தொல்பொருள் சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே தொல்பொருள் திணைக்களம் சான்றுகளோடு தொடர்புபட்ட இடங்களை அடையாளப்படுத்தி வகைப்படுத்த வேண்டும். அதற்கு ஒரு வார கால அவகாசத்தை தொல்பொருள் திணைக்களம் கோரியுள்ளது. இந்தச் செயற்பாடு முடிவுற்றதும் குறித்த காணிகளில் உழவு நடவடிக்கைகளை மேற்கொண்டு, பயிர்செய்ய காணி உரிமையாளர்களுக்கு பிரதேச செயலகம் மூலம் அறிவுறுத்தப்படும் - என்றார். (ற)

## இலங்கையின் நன்கொடை லெபனானில் முறைகேடு!!

கொழும்பு, செப். 11

பெய்ரூட் பெருவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் இலங்கை நன்கொடையாக வழங்கிய தேயிலை அங்கு மோசடி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை நன்கொடையாக வழங்கிய தேயிலையை லெபனான் ஜனாதிபதி மைக்கல் அவுன் தனது குடும்பத்தினருக்கும், காவலர்களுக்கும் வழங்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 4ஆம் திகதி இடம்பெற்ற பெருவெடிப்பில் 190க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். இதையடுத்து உலக நாடுகள் லெபனானுக்கு பெரும் உதவிகளைச்செய்துவந்தன. சுமார் ஆயிரத்து 675 கிலோ தேயிலை இலங்கையால் லெபனானுக்கு வழங்கப்பட்டது. (ம-இ)

## தனிமைப்படுத்தப்பட்டிருந்த 25 பேர் நேற்று விடுவிப்பு

முல்லைத்தீவு, செப். 11

கேப்பாபிலவு விமானப் படைத்தளத் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் தனிமைப்படுத்தியிருந்த 25 பேர் நேற்று தமது தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு வருகை தந்த பலர் கேப்பாபிலவு விமானப் படைத்தளத் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் கடந்த மாதம் தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் பி.சி.ஆர் பரிசோதனையின் பின்னர் கட்டங்கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் 25 பேர் தமக்கானசோதனைகளையும் தனிமைப்படுத்தலையும் நிறைவுசெய்து நேற்று வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். (ம-19)

## மூன்று ரஷ்ய பல்கலைக்கழகங்களை நீக்கியது இலங்கை மருத்துவ சபை

கொழும்பு, செப்.11

ரஸ்யாவின் மூன்று பல்கலைக்கழகங்களை இலங்கை மருத்துவ சபை தமது சர்வதேச பல்கலைக்கழக பட்டியலில் இருந்து நீக்கியுள்ளது.

இதில் உலகின் முன்னணி பல்கலைக்கழகமான பெட்ரைஸ் லுமும்பா பல்கலைக்கழகமும் அடங்குகின்றது.

தீவிரமான ஆய்வின் பின்னரே இதற்கான முடிவு எடுக்கப்பட்டது என இலங்கை மருத்துவ சபை மேலும் தெரிவித்துள்ளது. கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற மருத்துவ சபையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை மாணவர்களுக்கு முழுமையான புலமைப்பரிசில்களை வழங்கி வந்த லுமும்பா பல்கலைக்கழகம், பிரோகோவ் ரஷ்யன் தேசிய ஆராய்ச்சி மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் ட்வர் அரச மருத்துவ பல்கலைக்கழகம் ஆகியவை சர்வதேச பல்கலைக்கழக பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

இவை இலங்கையின் 40 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் புலமைப் பரிசில்களை வழங்கி வந்தன. இதில் 5 புலமைப்பரிசில்கள் மருத்துவத் துறைக்கானவை.

எனினும் மூன்று பல்கலைக்கழகங்களும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டாலும், நீக்கும் தீர்மானத்திற்கு முன்னதாக பட்டப்படிப்பை நிறைவு செய்த மற்றும் தற்போது கல்வி கற்கும் மாணவர்களும் மருத்துவ சபையில் பதிவு செய்வதில் தடையில்லை என்று இலங்கை மருத்துவ சபையின் பதிவாளர் வைத்திய கலாநிதி ஆனந்த ஹப்புகொட தெரிவித்துள்ளார். (ம-இ)

## 43கிலோ கஞ்சா பளையில் மீட்பு!

கிளிநொச்சி, செப். 11

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தப்பட்ட 43 கிலோ கஞ்சா பளை - வத்திராயன் பகுதியில் வைத்து நேற்று மீட்கப்பட்டது.

அவற்றைக் கடத்தினர் என்ற சந்தேகத்தில் இருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் இயந்திரப் படகு, மோட்டார் சைக்கிள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-113)

# இனிப்புப் பான உற்பத்திகளுக்கு வரிகள் குறைத்தமை எதற்காக?

*கேள்வி எழும்புகிறார் ராஜித*

கொழும்பு, செப். 11



இலங்கையில் இனிப்புப் பான உற்பத்திகளுக்கு எவ்வித விஞ்ஞான பூர்வமான முன்மொழிவுகளுமின்றி வரி குறைப்பு மற்றும் சலுகையை அரசாங்கம் வழங்கியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற உற்பத்தி வரிகள் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இனிப்புப் பான உற்பத்தியை இரண்டு சர்வதேச நிறுவனங்களும் இலங்கையில் உள்ள ஒரு நிறுவனமும் மேற்கொள்கின்றன. இனிப்பு பானங்களுக்கு எமது அரசாங்க காலத்தில் விதித்திருந்த வரிகள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வரவேற்பைப் பெற்றிருந்தது. சாதாரணமாக ஒரு போத்தல் இனிப்பு பானத்தில் 8 தேக்கரண்டி சீனி கலக்கப்படுகிறது. ஒருநாளைக்கு எமது உடம்புக்கு 8 தேக்கரண்டி சீனிதான் அவசியம். இந்த பானத்தை குடித்தால் ஒரு நாளைக்குத் தேவையான சீனியின் அளவு எமக்கு கிடைத்து விடும். எமது நாட்டில் தொற்றா நோய்களில் பிரதானமானது நீரிழிவு நோயாகும். நூற்றுக்கு 20 சதவீதமானவர்கள் நீரிழிவு நோய்க்கு உள்ளாகியுள்ள நிலையில் இதனை முறியடிக்க நாம் வரிக் கொள்கையொன்றை கொண்டுவந்தோம். பழப் பானத் தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் இலங்கையர்களாவர். இதுவொரு தேசிய கைத்தொழிலாகும். இவர்கள் சில சலுகைகளை கோரியிருந்தனர். அதனை நாம் கவனத்தில் கொண்டு முழுமையான இனிப்பு பான உற்பத்திகளின் ஒவ்வொரு கிராம் சீனிக்கும் 50 சதம் வரி விதித்தோம். பழப்பானங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து இனிப்புப் பானங்களுக்கும் நாம் 50 சதம்வரிவிதித்திருந்தோம். இதனால் இனிப்பு பானம் பருகுவதிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இதுதான் எமது வரிக்கொள்கை. ஆனால், இன்று சர்வதேச நிறுவனங்களுக்கும் சலுகை வழங்கப்பட்டுள்ளது. 50 சத வரியை 30 சதமாகக் குறைத்துள்ளனர். விஞ்ஞானபூர்வமான எவ்வித தரவுகளுமின்றி இவ்வாறு சலுகை வழங்கியுள்ளனர். அவர்களிடம் இயற்கை இனிப்பு இல்லை என்பதுடன், 6 தேக்கரண்டியும் செயற்கை இனிப்பாகும். இதேவேளை, பழங்களில் தயாரிக்கப்படும் பானங்களுக்கு 9 கிராம் சலுகை வழங்கியுள்ளனர். ஏன் எவ்வளவு அதிகரிப்பு எனத் தெரியவில்லை. 6 வீதம்தான் இருக்க வேண்டும். புகையிலைக்கு எதிரான கொள்கை, மருந்து முகாமைத்துவ கொள்கை என எமது திட்டங்களுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் வரவேற்பளித்திருந்தது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலக்குக்கு ஒத்துழைப்பு வழங்கிய 6 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இதனால் இதுதொடர்பில் பிரதமர் மீண்டும் சிந்திக்க வேண்டும். உலகில் ஏற்றுக்கொண்டுள்ள இந்த முறைமையை மாற்ற வேண்டாம். பழங்களில் தயாரிக்கும் பானங்களுக்கு மாத்திரம் சலுகை வழங்கி ஏனையவற்றுக்கு சலுகை வழங்க வேண்டாமென கோருகின்றோம் - என்றார். (ம-இ)

# இத்தாலியில் கொரோனா விதிமீறல்: இலங்கையர் இருவருக்கு தண்டம்

மிலன், செப். 11

இத்தாலியில் இலங்கையர்கள் இருவருக்கு தலா 377 யூரோ என்ற கணக்கில் 754 யூரோ தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி, பிரேஷியா நகரத்தில் முகக் கவசம் அணியாமலும், சமூக இடைவெளியை கடைபிடிக்காமலும் இருந்த இரண்டு இலங்கையர்களுக்கே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# ஸஹ்ரான் குழுவுக்கு பெரும் உதவி கிட்டியது!

*ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஹக்கீம் தெரிவிப்பு*

கொழும்பு, செப் 11



**உயிர்த்தஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட ஸஹ்ரான் குழுவுக்கு வெளிநாட்டில் இருந்து பெரும் உதவியொன்று கிட்டியுள்ளது. அது உள்நாட்டில் இருந்துதான் கிட்டியிருக்க வேண்டும் என்பதல்ல. வெளிநாட்டில்கூட பெரும் சக்தியொன்று இந்தச் சதித் திட்டத்தின் பின்புலத்தில் நிச்சயம் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம்.**

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் சாட்சியம் வழங்குகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸஹ்ரானின் பயங்கரவாத கும்பல் நேபாளம், கிர்கிஸ்தான், கஜகஸ்தான் நாடுகளில் பயன்படுத்தப்படும் சிம் அட்டைகளை தமக்கிடையே தொடர்பாடலுக்கு பயன்படுத்தியுள்ளனர். இந்த சிம் அட்டைகள் ஸஹ்ரான் கும்பலுக்கு எப்படிக் கிடைத்தன? பிடியாணை தொடர்பில் பொலிஸார் அவர்களைக் கைதுசெய்ய தேடினாலும் மாட்டிக் கொள்ளாதவாறு இருக்க யாரோ உதவி செய்துள்ளனர். அதனால்தான் நான் மறைமுக சக்தி ஒன்று உள்ளதாகச் சந்தேகிக்கின்றேன். இவ்வாறான, திட்டமிட்ட தாக்குதல் ஒன்றை, ஒரே நேரத்தில் பல இடங்களில் நடத்த, இந்த கும்பலுக்கு உள்நாட்டுக்குள் இருந்து மட்டும் உதவி கிடைத்திருக்கும் என நம்பமுடியாது. கண்டிப்பாக வெளிநாட்டு சக்தியொன்றின் உதவி கிடைத்திருக்கும். அவர்கள் இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருக்கலாம். முன்னாள் தேசிய உளவுச் சேவை பிரதானி, இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கிய வாக்குமூலத்தில், தெஹிவளையில் குண்டை வெடிக்கச் செய்த குண்டுதாரி தொடர்பில் இரகசியமாக வாக்குமூலம் அளித்திருந்தார். அதிலும் சில விடயங்களை கூறியிருப்பார் என நினைக்கின் றேன். குறித்த குண்டுதாரி, பிரபலமான ஹோட்டல் ஒன்றில் குண்டைவெடிக்கச்செய்ய முயன்று பின்னர் அங்கிருந்து சென்றிருந்தார். தாக்குதல் நடந்த பின்னர், இது குறித்து சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தேகம் எழுப்பியிருந்தனர். அதே சந்தேகம் எமக்கும்உள்ளது. இந்த தாக்குதல்களின் பின்னணியில் எமது நாடு உறுதித்தன்மையை இழக்கும் போது, அதனூடாக நன்மையடைய முயலும் சக்தியொன்று பின்னணியில் இருக்கின்றது என நம்புகின்றோம்' - என்றார். (ம-இ)



# விபத்தில் இருவர் காயம்

வவுனியா, செப்.11

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். வவுனியா நெளுக்குளம் பகுதியிலிருந்து நகர் நோக்கி மன்னார் வீதி வழியாக சென்ற மோட்டார் சைக்கிளை அதே திசையில் வந்த இன்னொரு மோட்டார் சைக்கிள் வேப்பங்குளம் பகுதியில் முந்திச் செல்ல முற்பட்ட வேளையே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்துள்ளனர். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டனர். (ற-110)

# சைக்கிள் திருடன் யாழ்.நகரில் கைது

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் உள்ள கடை ஒன்றுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் திருடிய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர். இரவுக் கண்காணிப்பில் ஈடுபட்ட பொலிஸாரால் அவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-25)

# இரு தனியார் நிறுவனங்களில் பி.சி.ஆர்.சோதனை முன்னெடுப்பு

சாவகச்சேரி, செப்.11

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட இரு தனியார் நிறுவனங்களில் வைத்து, எழுந்தமானமாக பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 23 ஆம் திகதி வரணியில் இயங்கும் மாகா வீதி அபிவிருத்தி நிறுவனத்திலும், 28 ஆம் திகதி எழுதுமட்டுவாழில் இயங்கும் டோக்கியோ சிமெந்து கலவை நிறுவனத்திலும் வைத்து இந்தப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)


# மரணதண்டனைக் கைதி எம்.பியாக பதவியேற்பு

*கேள்வி எழுப்பும் சர்வதேச ஊடகங்கள்*

கொழும்பு, செப்.11

மரணதண்டனைக் கைதி பிரேமலால் ஜயசேகர நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்தமை தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் எவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்ய முடியும் என நியூயோர்க் டைம்ஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

ஆள்கொலை வழக்குடன் தொடர்புடைய இலங்கை அரசியல்வாதி ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்ட நிலையில், சத்தியப்பிரமாணம் செய்வதற்காக எதிர்க்கட்சியின் கோஷங்களுக்கு மத்தியில் சிறைச்சாலையிலிருந்து நாடாளுமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டார் என தி கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரேமலால் ஜயசேகர நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் என அல்ஜெசீரா செய்தி வெளியிட்டுள்ளது. (வ-



# தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்

● பேராயர் வண.எஸ். ஜெபநேசன்

செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி மகாகவி பாரதி தினமாக உலகெங்கும் கடைப்பிடிப்பக்கபடுகின்றது. அந்த மகானை நினைவுகூரும் வண்ணம் இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

மகாகவி சுப்பிரமணி பாரதியார் 1921ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பதினோராம் திகதி நள்ளிரவு தமது 39ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அடுத்த நாள் அவர் பணியாற்றி வந்த சுதேச மித்திரன் பத்திரிகை பின்வருமாறு எழுதியது.

தமிழ்நாடு போற்றும் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வை நேற்றிரவு துறந்து விண்ணார்க்கு விருந்தாகி விட்டார் என்ற செய்தியை அறிவிக்க எமது மனம் பதறுகின்றது. சில தினங்களாக நோயால் வருந்திக் கொண்டிருந்த அவரை மறுபடியும் பார்க்கப் போவதில்லை என்று நாம் நினைக்கவில்லை. திங்கட்கிழமை வேலைக்கு வந்துவிடுவதாகச் சொல்லியனுப்பிய அவர் திங்கட்கிழமையன்று சாம்பலாகி விட்டது என்ன கொடுமை?

உலகிலே மகான்கள் பலர் உதிக்கின்றனர். கவிஞர்கள் பலர் தோன்றுகின்றனர். ஆனால் மகான்களாகவிருந்து எழுத்துலகில் தமது பெயர்களை நிலை நாட்டியவர்கள் ஒரு சிலரே. சொல் ஒன்று செயல் ஒன்று என்று இரட்டை வேடம் போடாதவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் ரஷ்ய எழுத்தாளர் லியோ லோல்ஸ்ரோய். மற்றையவர் தமிழ் நாட்டு மகாகவி பாரதி. கவிஞர் அப்துல் ரஹ்மான் 'பாரதி என் கவிதையை விட உன் வாழ்க்கை அழகானது' என்று எழுதினார்.

நல்ல இலட்சியங்களுக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் சம்பூரணமாக அர்ப்பணித்தவர் பாரதி. நாடு விடுதலையடைய வேண்டும். சமயங்களுக்கிடையே நல்லுறவு இருக்க வேண்டும். பெண்களின் அடிமை விலங்குகள் அகல வேண்டும். ஜாதிக் கொடுமைகள் மறைந்து போக வேண்டும். தமிழ்க் கவிதை மக்கள் இலக்கியமாக மாற வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியங்களுக்காக பல எதிர்ப்புக்கள் மத்தியிலே பாடுபட்டவர் இந்தக் கவிஞர்.

பாரதியார் வாழ்ந்த காலம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி. இன்று இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பீடித்திருக்கும் இன்னல்கள்போல அன்று தமிழ்நாட்டு மக்களிடம் நம்பிக்கை வறட்சி, அடக்குமுறையின் பயங்கரம், அரசியல் திக்குத் தெரியாத நிலை என்பன காணப்பட்டன. இந்த நிலையிலே பாரதி தமிழ் மக்களுக்கு அவசியம் தேவைப்பட்ட மனோ தைரியத்தை வழங்கினார்.

''தமிழா தெய்வத்தை நம்பு பயப்படாதே! உனக்கு நல்ல காலம் வருகின்றது. உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்தி ருக்கிறார்கள். தெய்வங்கள் கவிஞர்கள் அற்புதமான சங்கீத வித்வான்கள் கைதேர்ந்த சிற்பர், பலநூல் வல்லார் பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள்.

அச்சமில்லா தர்மிஷ்டர் பெருகுகின்றனர். என்று தனது துன்பங்களை ஒதுக்கிவிட்டு மக்களுக்கு தைரியமூட்டினார். தமிழ் மக்களைப் பயம் பீடித்துள்ளதென்று அறிந்து கொண்டு "பயம் என்னும் பேய்தனை அடித்தோம். பொய்மைப் பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்" என்று முழங்கினார்.

நடிப்புச் சுதேசிகளைப் பற்றிய பாடலில்

அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடி
ஊமைச் சனங்களெடி கிளியே

என்று எள்ளி நகையாடினார்.


இந்தவிதமான துணிவுக்கும் தன்னம்பிக்கைக்கும் காரணமாக அமைந்தது. அவருடைய தளராத கடவுள் நம்பிக்கையேயாகும். "வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு என்ற கவிதையில் இந்திய மக்களின் வேதனைகளைக் குறிப்பிட்டு விட்டு ''எனினுமிந் கிவையெலாம் இறைவன் அருளால்நீங்குவனவன்றி நிலைப்பனவல்ல"என்று முடித்தார்.

பப்பாப்பாட்டிலே குழந்தைக்குப் பின்வருமாறு உபதேசம் செய்கிறார்.

துன்பம் நெருங்கி வந்த போதும் - நாம்
சேர்ந்து விடலாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வமுண்டு-துன்பம்
அத்தனையும் போக்கிவிடுபாப்பா

பாரதியார் 'அவிழ்தது விட்ட நெல்லிக்காய் மூடைபோல' சிதறுண்டும் சிறுமைப்பட்டுமிருக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு கூறும் செய்தியென்ன? போராளிகளும் அரசியல்வாதிகளும் மௌனிக்கப்பட்டுவிட்டனர். இன்று இலக்கியவாதிகளே தமிழ் மக்களின் இருப்பைக் காப்பாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

அவர்களுக்கு பாரதி கூறுவது ஒரு சொற்கேளிர் சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!. ■




● ஆர்.பிரகாஷ்

இற்றைக்கு 19 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் உலகின் அமைதி கேள்விக்கு உட்பட்டது. அமெரிக்காவினதும் உலகினதும் வர்த்தக மையமாக விளங்கிய இரட்டைக் கோபுரங்கள் அல் குவைதாவின் வெறியாட்டத்தால் சரிந்து விழுந்தன. அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனும் தாக்கப்பட்டது. சில நிமிட இடைவெளிக்குள் அனைத்தும் நிகழ்ந்தன. உலகமே உறைந்தது.

அந்த எதிர்பாராத சம்பவம்

2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி காலை 8 மணி. உலக வர்த்தகத்தின் தலைநகரம் வழக்கம் போல் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. வீதிகளில் வாகனங்களின் படையெடுப்பு, ஹாரன் சப்தங்கள், கோட் சூட் போட்டோரின் வேக நடை, என அன்றாட பணிகளில் மக்கள் வழக்கம் போல் ஈடுபட்டிருந்த நேரம். விண்ணை முட்டும் அளவுக்கு ஓங்கி உயர்ந்து காணப்பட்ட அந்த உலக வர்த்தக மைய கட்டடங்கள், அன்றைய உலக பொருளாதாரத்தை நிர்ணயிக்கத் தயாராகிக்கொண்டிருந்தன.

சரியாக காலை 8 மணி 46 நிமிடங்கள். 110 மாடிகள் கொண்ட உலக வர்த்தக மையக் கட்டடத்தின், வடக்குக் கட்டடத்தின் 93 மற்றும் 99 மாடிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் திடீரென வானூர்தி ஒன்று அதிபயங்கர வேகத்துடன் மோதி வெடித்துச் சிதறியது. அதேநேரம் 14 நிமிடங்கள் கழித்து, 56 பயணிகள், 9 பணியாளர்களுடன் அதே பாஸ்டன் வானூர்தி நிலையத்தில் இருந்து புறப்பட்ட யுனைடெட் ஏர்லைன்ஸ் 175, போயிங் 767 ரக விமானம் காலை 9 மணி 3 நிமிடத்தில் உலக வர்த்தக மையத்தின் தெற்கு கட்டத்துடன் மோதி வெடித்தது. அதை நேரலையில் பார்த்துக்கொண்டிருந்தோருக்கும் சரி, ஒளிபரப்பிக்கொண்டிருந்தோருக்கும் சரி அதுவரையில்லாத உச்சகட்ட பீதி. திகைப்பு. ஏதோ விபத்து. சாதாரண விசயம் என்று நினைத்துக்கொண்டிருந்தோர் விக்கித்து நின்றனர். நியூயோர்க் நகரம் எங்கும் அலறல் சத்தம். அமெரிக்காவே உறைந்தது. நிச்சயமாக அந்தக்கணம் அமெரிக்காவுக்குச் சாதாரணமானதாக இருந்திருக்காது.

## உண்மையை உணர்ந்த அமெரிக்கர்கள்

சர்வ வல்லமை பெற்ற உலக வல்லரசு, எவராலும் அசைத்துவிட முடியாதபொருளாதாரம், உலகமே சேர்ந்தாலும் வீழ்த்திவிட முடியாத ஆயுத படைபலம் என உலகைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது அமெரிக்கா. தானின்றி உலகில் ஒன்றும் இல்லை என்பதான தோற்றத்தை கொடுத்திருந்தது. அப்படியான அமெரிக்காவின் அதிகாரத்தின் மீதான தாக்குதல். அந்த நாட்டுப் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் விதமான தாக்குதல். சிங்கத்தின் குகையில் அதன் பிடறியையே அறுப்பதற்குச் சமமான தாக்குதல்.

அமெரிக்காவின் மட்டுமல்ல உலக வர்த்தகத்துக்கே மையமாய் இருந்த உலக வர்த்தக மையத்தின் மீதான தாக்குதல். அமெரிக்காவின் அடையாளமாக, அத்தனை கம்பீரமாக இருந்த அந்த இரட்டைக் கோபுரங்களின் மீதான தாக்குதல் உலக வல்லரசுக்குப் பேரிடியாக இருந்தன. அப்போதுதான், நியூயோர்க் நகர மக்கள் ஏதோ அசம்பாவிதம் நடக்கிறது என்பதை உணரத் தொடங்கினர். மளமளவென இரண்டு கட்டடங்களும் இடிந்து விழுந்த நிலையில், வானை கரும் புகை சூழ்ந்தது. கட்டடங்கள் இடிந்து கிளம்பிய பெரும் புழுதி, தெருக்களை மூடி மறைத்துக்கொள்ள, இருண்ட கண்டமானது அந்த இரும்புக்கோட்டை.

உலக வர்த்தக மையம், பென்டகன் மீதான தீவிரவாத தாக்குதல்களில், சுமார் 3 ஆயிரம் உயிர்கள் மடிய, 6 ஆயிரம் பேர் காயமுற்றனர். அடுத்த சில மணிநேரங்களில் தாக்குதலுக்கு பொறுப்பேற்பதாக, அல் குவைதா அமைப்பு பகிரங்கமாய் அறிவித்தது. பலஸ்தீனை ஒடுக்க இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு தருவது, ஈராக் மீதான பொருளாதார தடைகள், காஷ்மீரில் உள்ள இஸ்லாமியர்களுக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தந்தது, சவூதி அரேபியாவில் அமெரிக்கப் படைகள் முகாமிட்டுள்ளமை என்பன போன்ற அடுக்கடுக்கான காரணங்களை, தாக்குதலுக்கான காரணங்களாக சொன்னது அல் குவைதா. இதனை அடுத்து, அல் குவைதா அமைப்பை களையெடுக்க ஆயத்தமானது அமெரிக்கா. தீவிர வாதத்துக்கு எதிரான பன்னாட்டுப் போரை அறிவித்தார் அமெரிக்க அதிபர் புஷ். இந்த அறிவிப்பே புலிகளின் அழிவிக்கும் பின்னர் வித்திட்டது. ■



# புங்குடுதீவு, பெருங்காடு கோயில் வயல்

# திருவருள் அநுக்கிரஹம் மிகுந்த ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்

# புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக பெருவிழா

# 2020

**கிரியாரம்பம்**
09.09.2020
(புதன்கிழமை)

**எண்ணெய் காப்பு**
13.09.2020
(ஞாயிற்றுக்கிழமை)

*திருச்சிற்றம்பலம்*
"பூவிலுயர் வளர்மருவு புங்கைநகர் மானெழுவம் பொலிந்த செந்நெல்
கோயில் வயலெழுந்தருளி குலமுறையாலெமை யாண்டு கொண்டுபூத்த
காவிமலரணைய திருக்கடையுலக மெலாங்களிக்க காக்குந்
தேவி மகா மாரியிரு செம்பதுமந் துணைப் பதங்கள் சிந்தை செய்வோம்"
*திருச்சிற்றம்பலம்*

**கும்பாபிஷேகம்**
14.09.2020
(திங்கட்கிழமை)

***ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மெய்யன்பர்களே!***

இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணம் பகுதியில் சைவ சித்தாந்த பண்பு நிறைந்த புங்குடுதீவு திவ்ய ஷேத்திரத்தில் வயல் சூழ் நாயகி. கோயில் வயல் நாமம் கொண்ட ஆதிசக்தி. மூர்த்தி. தலம். தீர்த்தம் அமையப் பெற்ற அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேம் நிகழும் மங்களமிகு சார்வரி வருடம் ஆவணி மாதம் 29 ஆம் நாள் (14.09.2020) திங்கட்கிழமை துவாதசி திதியும் பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 6.00 மணிமுதல் 7.00 மணிவரையுள்ள சிங்க இலக்கண சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் பரிவார மூர்த்திக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது எனவே இப் பெருவிழாவில் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து தொண்டுகள் பல செய்து திருவருள் பெற்று ஆனந்தமான வாழ்வு வாழவேண்டுகின்றோம்.

## கிரியாகால விபரங்கள்

| | | |
|---|---|---|
| **09.09.2020 புதன்கிழமை** | **காலை 9.00 மணிமுதல்** | அனுக்ஞை. விநாயகர் வழிபாடு. கணபதி ஹோமம் |
| | **மாலை 5.00 மணிமுதல்** | திரவிய பாகம் லஷ்மி ஹோமம் |
| **10.09.2020 வியாழக்கிழமை** | **காலை 9.00 மணிமுதல்** | விநாயகர் பூஜை. ரட்ஷோட்சம் ஹோமம். கோவாசம் |
| | **மாலை 5.00 மணிமுதல்** | விநாயகர் பூஜை. திசா ஹோமம். மூர்த்தி ஹோமம் |
| **11.09.2020 வெள்ளிக்கிழமை** | **காலை 9.00 மணிமுதல்** | விநாயகர் பூஜை. நவக்கிரக ஹோமம். கோளறு பதிக பாராயணம் |
| | **மாலை 5.00 மணிமுதல்** | ஸ்தூபி விமான பூஜை |
| **12.09.2020** | **காலை 9.00 மணிமுதல்** | விநாயக வழிபாடு. வாஸ்த்து சாந்தி. கங்கா பூஜை. சூரிய பூஜை. பூமி தேவி பூஜை. தீர்த்த. அக்னி. மிருத் சங்கிரகணம் |
| **சனிக்கிழமை** | **மாலை 5.00 மணிமுதல்** | விநாயக வழிபாடு. ரட்ஷா பந்தனம். கடஸ்தாபனம். தீபஸ்தாபனம். கலாகர்ஷணம். யாகபூஜை. ஹோமம். சர்வாஞ்சலி. யந்திர விம்பஸ்தாபனம் |
| **13.09.2020 ஞாயிற்றுக்கிழமை** | **காலை 9.00 மணிமுதல்** | விநாயகர் வழிபாடு. யாக பூஜை. ஹோமம். தைலாப்பியங்கம். சர்வாஞ்சலி |
| **காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலாம்** | | |
| | **மாலை 5.00 மணிமுதல்** | விநாயக வழிபாடு. யாகபூஜை. ஹோமம். விம்பசுத்தி. ஸ்பரிசஷாகுதி. சர்வாஞ்சலி |
| **14.09.2020 திங்கட்கிழமை** | | விநாயக வழிபாடு. யாகபூஜை. ஹோமம். மகா பூர்ணாகுதி. தீபாராதனை. கும்பங்கள் வீதி பிரதட்சனம். மஹாகும்பாபிஷேகம். பரிவர்த்தன மூர்த்திகள் அபிஷேகம். தசமங்கள தர்சனம் |

**நித்திய குரு**
கணேச உபாசகர்
**ச. சிவதர்சன் சர்மா**

**நைமித்திய குரு**
சிவகாம ரத்னா
**சிவஸ்ரீ கிருஸ்ணா குருக்கள்**
விழிசிட்டி ஞானவைரவர் தேவஸ்தானம்
ஈழத்துச் சிதம்பர நித்தியகுரு

**பிரதிஸ்டா பிரதம குரு**
"முத்தமிழ்க் குருமணி. சகலாகம சாங்கிரகர்"
**சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்**
ஸ்ரீ - கதிரமலைச் சிவன் தேவஸ்தானம் - சுன்னாகம்)

**சர்வ சாதகச்சாரியார்**
சாதக பூசணம்
**சிவஸ்ரீ பாஸ்கர ரவிக்குருக்கள்** (அராலி)
**பிரம்மஸ்ரீ ராகவ சர்மா** (கண்டி)

**வேத பாராயணம்**
**மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவன குருகுல மாணவர்கள்**

**மங்கள வாத்தியம்**
**(கணேச புதல்வர்)**
**சந்திரப் பிரியன் குழுவினர் (காரைநகர்)**

**பூமாலை அலங்காரம்**
**க.கமலேஸ்வரன்**
**(இணுவில்)**

**சிறப்பு வர்ண வேலைகள்**
**அராலியூர் நிசாந்தன் குழுவினர்**

**சிறப்பிக்கும் குருமார்கள்**
- சிவஸ்ரீ ஸ்ரீ காந்தக் குருக்கள் (சுன்னாகம்)
- சிவஸ்ரீ குகனேசக் குருக்கள் (உடுவில்)
- சிவஸ்ரீ சோம உமாரமணக் குருக்கள் (கல்வியங்காடு)
- சிவஸ்ரீ சிவகுமாரக் குருக்கள் (புங்குடுதீவு)
- சிவஸ்ரீ கணேச சபாபதிக்குருக்கள் (மயிலினி)
- சிவஸ்ரீ ரங்கநாத குருக்கள் (கண்டி)
- சிவஸ்ரீ துராக்ச குருக்கள் (துன்னாலை)

**யாக சம்ரட்ஷகர்**
- சிவஸ்ரீ சி. அம்பிகைநாதன் சர்மா
- சிவஸ்ரீ சு.சுஜீபன் சர்மா
- சிவஸ்ரீ சி.சயந்தன் சர்மா
- சிவஸ்ரீ சு.சுபாஸ்கரன் சர்மா
- சிவஸ்ரீ சி. ரமேஸ் சர்மா
- சிவஸ்ரீ நகுலேஸ் சர்மா
- சிவஸ்ரீ சி. சுரேஸ்குமார் சர்மா

**பாகசாலை - ராஜன் சர்மா**

**ஒலி. ஒளி அமைப்பு தமிழ்மாறன்- புங்குடுதீவு**

***குறிப்பு:***
அடியார்கள் அம்பாளுக்கு பால். தயிர். இளநீர். பூ. மாலை போன்ற பொருள்களைக் கொடுத்து அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய அறிவித்தல்**
1. அடியார்கள் யாவரும் முகக்கவசம் அணிவது கட்டாயம்
2. சமூக இடைவெளி பேணப்படவேண்டும்.

**ஆலய பரிபாலன சபையினரும், அம்பிகை அடியார்களும்.**

# தமிழர் விவகாரத்தில் மூக்கை நுழைக்காதீர்

## நாடாளுமன்றில் விக்கி எச்சரிக்கை

திருகோணமலை, குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குள் உள்ள திரியாய் என்ற இடத்தில் கிழக்கு மாகாணத் தொல்பொருள் செயலணியைச் சேர்ந்த பிக்கு ஒருவர் ஆயிரம் ஏக்கர் காணிகளில் இதுவரை காலமும் பயிர் செய்து வந்த விவசாயிகளை அந்தக் காணிக்குள் காலடி எடுத்து வைக்கக்கூடாது என்று பயமுறுத்தியமைக்கு நாடாளுமன்றத்தில் கடுமையாக விமர்சனம் செய்துள்ள யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் இதனால் தான் தமிழ் மக்கள் காணி அதிகாரம் தமது கைகளில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இடைக்கால கணக்கு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு விக்னேஸ்வரன் உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைக்கு காணி அதிகாரங்கள் கொடுக்கக் கூடாது என்று எம்மவர் சிலர் கூறி வருகின்றார்கள். இந்த விடயத்தை அவர்கள் கருத்தில் எடுக்க வேண்டும். எங்கிருந்தோ வந்த ஒரு புத்த பிக்கு எமது மக்களைத் தமது பாரம்பரிய காணிகளில் தமது பாரம்பரிய தொழிலை நடத்த விடாது தடுக்கின்றார் என்றால் காணி அதிகாரம் எமக்கு இருக்கக் கூடாதா?.

**தமிழ் பௌத்தர்கள்**

திரியாயில் தமிழ் மக்கள் விவசாயம் செய்வதற்கு தடைசெய்யப்பட்ட இடங்களில் இருப்பதாக கூறப்படும் தொல்பொருள் ஆராய்விடங்கள் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடமாக் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்த இடமா என்று கூட இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால் தான் வரலாறு தொடர்பில் ஆராய்வதற்காக ஒரு வரலாற்று ஆய்வாளர்களை கொண்ட ஆணைக்குழுவை அமைக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். இவை தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களென்றால் அவற்றைப் பாதுகாக்கும் கோரிக்கை தமிழ் மக்களிடம் இருந்து வரவேண்டுமேயொழிய சிங்களவரை மட்டும் உள்ளடக்கிய செயலணியில் இருந்து வரக்கூடாது.

ஆகவே தான் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் வேற்றுநாட்டு தென்னாசிய வரலாற்று வல்லுநர்களைச் சேர்த்து ஆணைக்குழுவொன்றை கூட்டி சிங்கள மொழி பேசுவோர் பற்றிய முழுவிவரங்களைச் சேகரிக்கச் சொல்லியுள்ளேன். பௌத்தர்கள் என்றவுடன் அவர்கள் சிங்களவர்களே என்று எண்ணுவது மடமை.

**அரசுக்கு வரவேற்பு**

உள்ளூர் பொருளாதாரத்தை தீர்வைகள் ஊடாக பகுதியாக மேம்படுத்தும் பொருளாதாரக் கொள்கையுடையதாக இந்த அரசு இருப்பதை நான் அவதானிக்கின்றேன். இதை நான் வரவேற்கின்றேன்.

**வலுவடைய வேண்டும்**

கொரோனா நோய்ப் பரவல் எமது உணவு சம்பந்தமாக நாம் தன்னிறைவு அடைய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. தன்னிறைவு மட்டுமல்ல அதற்கு அப்பாலுஞ் சென்று ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நெல் விவசாயம் அமைய வேண்டும் என்பதே எமது கருத்து.

**விவசாயத்துக்கு இடைஞ்சல்**

வடக்கு கிழக்கில் விவசாயமே முக்கிய பொருளாதார நடவடிக்கையாகும். சுமார் 40 சதவீகிதத்தினர் விவசாயத்துடன் தொடர்புடையவர்களே. ஆனால் அண்மைக் காலங்களில் தமது பூர்வீகக் காணிகளில் கூட விவசாய நடவடிக்கைகளில் எம் மக்கள் ஈடுபடுவது தடுக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் கிழக்கு மாகாணத் தொல்பொருள் செயலணியைச் சேர்ந்த பிக்கு ஒருவர் ஆயிரம் ஏக்கர் காணிகளில் இதுவரை காலமும் பயிர் செய்து வந்த விவசாயிகளை குறித்த காணிக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று பயமுறுத்தியமை நினைவிருக்கும். குறித்த காணி திரியாய் என்ற இடத்தில் திருகோணமலை குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ளது. தொல்பொருள் ஆராய்ச்சிக்குத் தேவையானகாணிஎன்றுகூறிவிவசாயிகள் தமது சொந்தக் காணிகளுக்குள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளார்கள். இம்முறை பயிர் செய்ய முடியாது போகும் என்று அவர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மாகாண சபைக்கு காணி அதிகாரங்கள் கொடுக்கக் கூடாது என்று எம்மவர் சிலர் கூறி வருகின்றார்கள். இந்த விடயத்தை அவர்கள் கருத்தில் எடுக்க வேண்டும். எங்கிருந்தோ வந்த ஒரு புத்த பிக்கு எமது மக்களைத் தமது பாரம்பரிய காணிகளில் தமது பாரம்பரிய தொழிலை நடத்த விடாது தடுக்கின்றார் என்றால் காணி அதிகாரம் எமக்கு இருக்கக் கூடாதா? எமது நாட்டின் சகல இனங்களையும் ஒன்று கூட்டி பொருளாதார புனரமைப்புக்கு வித்திடுவது சிறந்ததா, அல்லது தொல்பொருள் காரணத்தைக் காட்டி ஒரு இனத்தை அமிழ்த்தி வைத்து அவர்களை எழும்பவிடாமல் செய்வது உகந்ததா?

**சவால்கள்**

நாம் தற்போது வடக்கு கிழக்கில் இருவிதமான சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம். ஒன்று நிர்வாகம் ரீதியானது. மற்றையது யதார்த்த பூர்வமானது. நிர்வாகமானது இதுவரையில் மேலிருந்து கீழ் நோக்கி ஆணையிடுவது போன்றே நடந்தேறி வந்துள்ளது. எமக்கு எவை எவை நன்மை பயப்பன என்பதைக் கொழும்பே தீர்மானித்து வந்துள்ளது. பொருளாதார திட்டங்க்ள் யாவும் கொழும்பில் இருந்தே தயாரித்து வரப்படுகின்றன. அதன் பின் அவை எம்மேல் பலாத்காரமாகத் திணிக்கப்பட்டு வருகின்றன. எமது அடையாளங்கள், எமது நிலம், எமது பாரம்பரியம், எமது காலநிலை, எமது கலாசாரம் எமது வாழ்க்கை முறை போன்றவை இதுவரை காலமும் கணக்கில், எ்டுக்கப்பட்டு வந்ததாகத் தெரியவில்லை.

எமது மாகாணத்திற்கு எவை நன்மை பயக்கும் என்று நாமே சிந்தித்து செயலாற்ற நாம் அனுமதிக்கப்படவில்லை அதற்கான அதி காரமும் பலமும் எமக்குத் தரப்படவில்லை.

அடுத்து யதார்த்த பூர்வமான சவால்கள். எமது மின்சார மீற்றர்களை வாசித்து வரும் சிற்றூழியர்கள் தற்போது தெற்கில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளார்கள். இதனால்உள்ளூரில்வேலையின்மை அதிகமாகி வருகின்றது.

பொருளாதாரத் துறையில் தன்னிறைவு, தற்சார்பு சம்பந்தமாக அரசு எடுக்கும் முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம். அதே நேரம் ஒரே நாட்டினுள் எமது வடகிழக்கு மக்கள் தமது நடவடிக்கைகளை பிறரின் உள்நுழைவின்றி தாமே கொண்டு நடத்த அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். என்றார்.

(ஒ,5)

**தேவை**

யாழ்நகரில் உள்ள உணவகம் ஒன்றிற்கு கொத்து போடத்தெரிந்தவர்கள் தேவை.
பழக விரும்புபவர்களும் தேவை

**076 259 1466**

**சாரதி தேவை**

**Ten Wheel** பாரவூர்தி சாரதி தேவை. திருகோணமலை, கொழும்பு சென்று வருவதற்கு.

தொடர்புகளுக்கு: **077 772 2305**

**பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், பளை(வ-து)**
**பதவி வெற்றிடம்**

எமது சங்கத்தில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலைக்கான பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக (ஒப்பந்த அடிப்படையில்) பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி :- உற்பத்தி முகாமையாளர்**

சம்பளம் :- ரூபா:- 24000 - மாதம் ஒன்றிற்கு வழங்கப்படும்.

(அ) கல்வித்தகைமை :- க.பொ.த. (சாதாரண) தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி. அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சாங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**வயதெல்லை:- 18 தொடக்கம் 45 வரை**

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

விண்ணப்பப்படிவங்களை சுயமாகத் தயாரித்து விண்ணப்பப் படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், அண்மையில் பெற்ற வதி விடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 19.09.2020 ஆம் **திகதிக்கு முன்னதாக "தலைவர், பச்சிலைப்பள்ளி ப.நோ. கூ.சங்கம், புலோப்பளை வீதி, பளை" எனும் முகவரிக்கு** பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ **அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிடப்படல் வேண்டும.**

தொடர்பு: **077 899 8853**
10.09.2020

**பச்சிலைப்பள்ளி**
**ப.நோ.கூ.சங்கம், பளை.**

**சாவகச்சேரி பேருந்து நிலைய கட்டடத்தில் 2020ஆம் ஆண்டிற்கான விளம்பர பலகை நிறுவுவதற்கான கேள்வி கோரல்**

சாவகச்சேரி பேருந்து நிலைய கட்டடத்தில் விளம்பரப்பலகை நிறுவுவதற்கு 2020ஆம் ஆண்டிற்கான கேள்வி கோரப்பட்டுள்ளது. விளம்பரப் பலகை நிறுவுவதற்கு அனுமதிக்கப்பட்ட சதுர அடி 720. மேலதிக விபரங்கள் நிபந்தனைகள் என்பவற்றை **அலுவலக நேரத்தில் நகராட்சி மன்றத்திற்கு சமுகமளித்து** அல்லது 0212270806 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் **24.09.2020 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

**நகராட்சிமன்றம்**
**திருமதி சிவமங்கை இராமநாதன்**
**சாவகச்சேரி**
**தவிசாளர்**
**11.09.2020**

**சாவகச்சேரி**
**நகராட்சி மன்றம்**

**ஆதனப்பெயர்மாற்றம்**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 13 கோவில் வீதியில் ஆதன இலக்கம் 111 B என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது தியோ மைக்கல் என்ற பெயரிலே ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இளையதம்பி கோபாலசிங்கம் முகதாவில் 1972.08.07ம் திகதியிடப்பட்ட 147ம் இலக்க உறுதி ஊடாக தியோமைக்கல் சொலமன் நில.பர 5குளி 6 விஸ்தீரணமான ஆதனத்தில் நிந்தப்படுத்தப்பட்ட நில.பர 2 குளி 6 இன் சொரியலான அரைவாசி மைக்கல் சுவாம்பிள்ளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

எனினும் குறித்த 147ம் இலக்க உறுதியில் சொரியலான அரைப்பங்கிற்கு தாயுறுதிகள் எதுவும் குறிப்பிடப்படாது வெறுமனே பெற்றோர் வழிவந்த ஆதனமென குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை மைக்கல் சுவாம்பிள்ளை யாருக்கும் எழுதிக்கொடுக்காமல் இறக்க அவரின் சகோதரி வெளிச்சோர் அந்தோனிமுத்து கைம்பெண் யோசப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு இ.ஜெயசிங்கம் முகதாவில் 1998.08.25ம் திகதியிட்ட 1881 இலக்க உறுதி மூலம் றிச்சேட் பாலேந்திரா வின்சன் பெண் பற்றிமா ராஜினிக்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

மேற்குறித்த ஆதனத்தை 2264 இலக்க 1999.12.18 திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு இ.ஜெயசிங்கம் முகதாவில் நிறைவேறிய உறுதி மூலம் றிச்சேட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமா ராஜினியும் சின்னப்பு நாயகம் கௌரிநாயகத்திற்கு நிபந்தனை அறுதி மூலம் வழங்கப்படுகிறது

"சின்னப்பு நாயகம் சௌந்தரநாயகமும் பெண் அர்ச்சனா செல்வரஞ்சிதமும் பிரசித்த நொத்தாரிசு சி.ஜெயசிங்கம் முகதாவில் 2001.12.04ம் திகதியிட்ட 2657ம் இலக்க அறுதி உறுதி மூலம் மீளவும் றிச்சேட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமா ராஜினிக்கும் அறுதியாக விற்பனை செய்துள்ளார்.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.ஜெயசிங்கம் முகதாவில் 2001.12.04ம் திகதியிட்ட நிபந்தனை அறுதி உறுதி மூலம் றிச்சேட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமா ராஜினியும் மாணிக்கம் குமாரசாமியும் பெண் ஜெயராணிக்கும் அறுதி விற்பனை செய்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட மாணிக்கம் குமாரசாமியும் பெண் ஜெயராணியும் மீளவும் 14.10.2003ம் திகதியிடப்பட்ட 3760 இலக்க அறுதி உறுதி மூலம் றிச்சேர்ட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமாவுக்கும் அறுதியாக விற்பனை செய்துள்ளனர்.

பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 2005.09.11ம் திகதியிட்ட 1032 ம் இலக்க உறுதி மூலம் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி றக்கா வீதி இல 40 றிச்சேட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமா ராஜினியும் எஸ்தாக்கி டியூக் கருணாகரன் பெண் நீற்றா குமுதினி கருணாகரன் ஆகியோர்களுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

குறித்த எஸ்தாக்கி டியூக் கருணாகரன் பெண் நீற்றா குமுதினி கருணாகரன் தமது விசேட அதிகாரத் தத்துவப்பத்திரம் மூலம் எஸ்தாக்கி கிளமோற் குலெந்திரனுக்கு தனது பெயரில் மாநகரசபையில் ஆதனவரிப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்ள அதிகாரம் வழங்கியுள்ளனர்.

**ஆதனடாப்பு:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை "புது வளவு" உத்தரவு பெற்ற அளவையாளர் ஏ.லாறன்ஸ் 25.08.1972ம் திகதியில் அளந்து வரைந்த 3760ம் இலக்கபடத்தின் படி நில.பர.2குளி 7. இதில் வடக்குப்பக்கமாக அரைவாசி நில.பர.1 என்று குளி (3.5) மூன்று தசம் ஐந்தும் கிணறும் அதற்குரியவைகளும். அதன் எல்லைகள்

கிழக்கு:-கோவில் வீதி வடக்கு:-இதன் மிகுதி ஆதனம். மேற்கு:-வின்சன்ற் கைம்பெண் திரேசம்மாவின் ஆதனம். தெற்கு:-வின்சன் பெண் ஸ்ரெலா சரோஜினியின் ஆதனம். இதடங்கலும்

தற்போது எஸ்தாக்கி டியூக்கருணாகரன் பெண் நீற்றா குமுதினி தமது தத்துவக்காரர் ஊடாக இவ் வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது எஸ்தாக்கி டியூக்கருணாகரன் பெண் நீற்றா குமுதினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இம்மனுவல் ஆனல்ட் முதல்வர்**
**மாநகரசபை**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 . 03 . 1951
உதிர்வு 11 . 09 . 2019



# கந்தையா சிவனேசன்

(கோவில் வீதி-யாழ்ப்பாணம், திருகோணமலை, தெஹிவளை)

நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
ஓராண்டு ஆன போதும்
உம்மை நாங்கள் இழந்த துயரை
ஈடு செய்ய முடியாமல் தவிக்கின்றோம்!

துன்பம் இன்றி கஷ்டங்கள் இன்றி
எங்களை காத்தீரே எம் தந்தையே!
எம்மை விட்டு பிரிந்ததேனோ?

உங்கள் நற்சிந்தனை, நற்பண்பு, நல்லொழுக்கம் யாவும்
எங்கள் வாழ்வில் என்றென்றும் வழிகாட்டியாக இருக்கும்!

மாதங்கள் பன்னிரெண்டு ஆனாலும் அழியாது
எம் துயரம் மறையாது உங்கள் நினைவு!

உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்...
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

தகவல்: குடும்பத்தினர்

## பாரதியார் விழா

யாழ்ப்பாணம், செப்.11

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பாரதியார் விழா நிகழ்வுகள் நாளை காலை 10 மணிக்கு கல்லூரியின் அதிபர் கலாநிதி வண எஸ். சொலமன் அடிகளாரின் தலைமையில் இடம்பெறும். நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.டானியல் தியாகராஜா கலந்து கொள்ளவுள்ளார். (எ)

## தவறான...

உடல்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் பல ஆண்டுகள் காதலித்து வந்த நிலையில், திருமணத்துக்குத் தடை ஏற்பட்டதால் இந்தத் தவறான முடிவை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பரந்தன், குமரபுரத்தைச் சேர்ந்த சு.சுசிதரன் (வயது28), கிளிநொச்சி இரத்தினபுரத்தைச் சேர்ந்த த.தனுசியா (வயது27) ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சுசிதரன் இலங்கை மின்சார சபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர். தனுசியா அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தில் பிரதேச செயலகம் ஒன்றில் பணியாற்றுகின்றார். இவர்கள் கடந்த 4ஆம் திகதி அவர்களின் வீடுகளில் இருந்து காணாமல் போயுள்ளனர்.

கிளிநொச்சி, பெரியபரந்தன் ரோஸ் வீதியில் உள்ள பாழடைந்த கட்டம் ஒன்றில் இருந்து நேற்றுக் காலை துர்நாற்றம் வீசியதை அடுத்து அந்தப் பகுதி மக்கள் அங்கு சென்று பார்த்துள்ளனர். ஒரு கயிற்றில் தொங்கிய ஆண், பெண் சடலங்களைக் கண்ட அவர்கள் அது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

சம்பவ இடத்துக்கு வந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். மீட்கப்பட்ட உடல்கள் பழுதடைந்திருந்தன.

இவர்கள் நீண்டகாலமாகக் காதலித்து வந்த நிலையில், சமூகப் பிரச்சினை காரணமாக இவர்களது திருமணத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன என்று உயிரிழந்தவர்களின் நண்பர்கள் கூறுகின்றனர். இவர்கள் இவ்வாறான முடிவை எடுப்பார்கள் என்று தாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும், அவ்வாறு அவர்கள் தங்களுடன் இதுவரை உரையாடவில்லை என்றும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-6)

## மரண அறிவித்தல்

### தவநாதன் (இரத்தினம்) தனுசிகா

பிறப்பு 07.06.1993 இறப்பு 10.09.2020



இரத்தினபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவநாதன் (இரத்தினம்) தனுசிகா அகால மரணமானார்.

அன்னார் திரு.திருமதி தவநாதன் கீதா தம்பதியரின் கனிஸ்ர புத்திரியும், யானுகாவின் (ஆசிரியர், கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை) அன்புச் சகோதரியும், றொசாந்தனின் மைத்துனியும், தேவராசா, கமலாதேவி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை அவர்களின் பேர்த்தியும், சுகந்தா மகேந்திரராசா, அனுதா, ஜெயக்குமார், றசிதா அகிலன் ஆகியோரின் அன்புப் பெறாமகளும் ஜசிந்தன் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை), மோகனா ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.09.2020) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நீங்கா நினைவில்



### அமரர் சண்முகம் தனிகாசலம் (J.P)

தோற்றம் 08 . 08 . 1933
மறைவு 29 . 08 . 2013

திதி: அபரபக்க நவமி

நில்லாது பொழியும் அன்பிலாகட்டும்
நிலைத்த நல் பண்பிலாகட்டும்
நிரந்தரமானவர்கள் நீங்கள்
அகரம் சொல்லித் தந்த போதும்
சிகரம் ஏறி நின்ற போதும்
மாறாதவர்கள் நீங்கள்
வம்புக்கும் அன்புதான் மருந்து
அதுவே உறவினில் விருந்து
எனும் அறிவு தந்தவர்கள் நீங்கள்
இதிகாசமும், புராணமும் கற்றுத் தந்தீர்கள்
இருளிலும் இயல்பாக இருக்க கற்றுத் தந்தீர்கள்
துன்ப மேகம் சூழும் போதும் அதில்
வீழாது இருக்க கற்றுத் தந்தீர்கள்
இன்ப வெள்ளம் பெருகும் போதும் அதிலே
சாயாது இருக்க கற்றுத் தந்தீர்கள்
கண்டதும், கேட்டதும் குறைவில்லாது கற்றுத் தந்தீர்கள்.
வாழும் முறைகள் நிறைவாகவே கற்றுத் தந்தீர்கள்.
உங்களிடம் கற்க ஏராளம் உண்டு ஆனால்
கற்றுத்தர நீங்கள் எம்முடன் இல்லை
ஆனாலும் உங்கள் நினைவில்
நித்தமும் கலங்கி வாழ்கின்றோம்.

தனிகை மஹால் 151/1(528)
பலாலிவீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

E,S Printers
மக் பிரிண்ட் (MUG)



# 357, Kasthuriyar Road, Jaffna
021 492 7471 / 021 492 7472
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் இராமநாதன்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்) லண்டனில் 06.09.2020 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் (முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவரும், மலாயன் பென்சனியர்) மற்றும் இராசம்மா தம்பதியரின் புத்திரரும், காலஞ்சென்ற சறோஜாதேவி (வட்டுக்கோட்டை) மற்றும் நேசமலரின் அன்புக் கணவரும், கீத்தா, கஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரி (கனடா) மற்றும் புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ஜெகநாதன் (ஓய்வுபெற்ற வங்கியாளர்) மற்றும் யோகநாதன், இரத்தினேஸ்வரி (ஓய்வுபெற்ற நூலகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

நூலக வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
021 224 3603
077 598 3189

தகவல்:
திருமதி இ. பாலசிங்கம்

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 01 . 1950



இறப்பு 08 . 09 . 2020

### பெனடிக்ற் அன்ரன் தர்மபாலன்

(இளைப்பாறிய விலைமதிப்பீட்டாளர், விலைமதிப்பீட்டு திணைக்களம் & Construction Consultant - Florida Real Estate private Ltd)

யாழ்ப்பாணம் 69/2, வேம்படி வீதியை பிறப்பிடமாகவும் புலோலி கிழக்கு, பருத்தித்துறை மற்றும் 30, 1/2, (ஜேசன் தொடர்மாடி) ஸ்ரீ சரணங்கர வீதி, களுபோவில தெஹி வளையை வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிக்ற் அன்ரன் தர்மபாலன் அவர்கள் 08.09.2020 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் பெனடிக்ற் மேரி மாகிறட் தம்பதிகளின் ஏக புதல்வனும் காலம்சென்ற கணபதிப்பிள்ளை பசுபதி - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் திருப்பதியின் ஆருயிர் கணவரும், விசாகன் (ஜேர்மனி), ஜனனன் (ஜேர்மனி), விதுர்த்ரா (ஜேர்மனி ), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபாவின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் மேரி திரேசா (இந்திரா - லண்டன்), சரோஜா (கனடா), மேரி ஜெசிந்தா (யாழ்ப்பாணம்), லலிதா (பிரான்ஸ் ), றஞ்சினி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அசுபதி, ரகுபதி, ஜெகசிவமணி, கணபதி, ஆனந்தநடேசன், பேரின்பயசோதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 09.09.2020 புதன்கிழமை மற்றும் 10.09.2020 வியாழக்கிழமை இரு தினங்களும் காலை 9.00 முதல் மாலை 8.00 மணிவரையும் பின்னர் 11.09.2020 வெள்ளிக்கிழமை இல 20, அச்சக வீதி சுண்டிக்குளியி லும் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 12.09.2020 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயததில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யாழ். மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

இல.30, 1/2, ஸ்ரீ சரணங்கர வீதி,
களுபோவில,
தெஹிவளை.

கணபதி (மைத்துனர் - + 94 773 073 605
ஆதித்தன் (மருமகன் - + 94 765 773 567
விசாகன் (மகன் - + 49 173 4084941

## மதக் கட்டு...

டைய கட்டுமானங்கள் எவையும் கட்ட முடியாது என்றும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனை தண்ணிமுறிப்பு வீதியில் உள்ளது குருந்தூர் மலை. அங்கு தமிழ் மக்கள் நீண்ட காலமாக வழிபடும் ஐயனார் ஆலயம் ஒன்று உள்ளது. புத்தர் சிலை ஒன்றை அமைக்கும் முயற்சிகள் 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி பௌத்த துறவிகள் சிலரால் முன்னெடுக்கப்பட்டன. அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைகளின் பின்னர், குருந்தூர் மலைக்கு மக்கள் சென்று வரலாம் என்றும் அங்கு எந்த மாற்றங்களும் செய்ய முடியாது என்றும் 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13ஆம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

எனினும் அண்மைய நாள்களாக குருந்தூர்மலைப் பகுதியில் கட்டுமான வேலை ஒன்றை முன்னெடுக்கும் முயற்சிகளில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டுள்ளது என்பதை அறிந்த ஆலய நிர்வாகத்தினர் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றத்தை நாடினர். நகர்த்தல் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்து முன்னைய வழக்கின் கட்டளையைக் கருத்தில் கொண்டு தற்போதைய கட்டுமானம் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் என்று மன்றைக் கோரியிருந்தனர். ஆலய நிர்வாகத்தினர் சார்பாக சட்டத்தரணி க.சுகாஸ் முன்னிலையானார்.

இந்த மனுவை ஆராய்ந்த நீதிமன்று தொல்பொருள் திணைக்கள அதிகாரிக்கு அழைப்பாணை உத்தரவு பிறப்பித்ததுடன், நேற்றுவரை வழக்கை ஒத்திவைத்தது. நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஆலய நிர்வாகத்தினர், தொல்பொருள் திணைக்களத்தினர், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், பொலிஸார் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

காவலரண் அமைப்பதற்கான கட்டுமானங்களே மேற்கொள்ளப்படுகின்றன என்று தொல்பொருள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். காவலரண் அமைப்பதற்கான மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகம் என்பன வழங்கிய அனுமதிகளையும் அவர்கள் மன்றில் சமர்ப்பித்தனர்.

முன்னைய வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் இரு தரப்பினரும் இணங்கியது போன்று மதத்துடன் தொடர்புடைய கட்டுமானங்களை அங்கு கட்டுவதில்லை என்ற இணக்கத்தைத் தொடர்வது என்றும், தொல்பொருள் திணைக்களம் அந்தப் பகுதியில் கட்டுமானம் எதையும் மேற்கொள்ளாது என்றும், அங்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளை மன்றுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிமன்றில் இணக்கமான முடிவு எடுக்கப்பட்டது என்று சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார். (எ19,246)

## மக்களிடம்...

தற்கோ, குற்றவாளிகளை நாடாளுமன்றத்துக்கு அழைப்பதற்கோ ஆளுங்கட்சிக்குக் காணப்படும் தார்மீகத்தன்மை தொடர்பாக மக்கள் கேள்வியெழுப்ப ஆரம்பித்துவிட்டனர். ஆணை வழங்கிய மக்களின் கேள்விகளில் இருந்து அரசு தப்பித்துக்கொள்ள முடியாது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தேசிய பட்டியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னர் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள ஏனைய பிரச்சினைகளுக்குத் துரிதமாகத் தீர்வு காண வேண்டியது அவசியம். அதற்காக அனைவரிடமும் கலந்துரையாடப்பட வேண்டும். கட்சியின் தவிசாளர் மற்றும் பிரதி தலைவர் போன்ற பதவிகளுக்கான நியமனங்களை இரு மாதங்களுக்கு மேல் இழுத்தடிப்பது சிறந்ததல்ல.

புதிய உபாயங்களைப் பயன்படுத்தி கட்சியின் செயற்பாடுகளை மறுசீரமைக்க வேண்டியது அவசியமாகிறது. மறுபுறம் தூக்குத் தண்டனை கைதி பிரேமலால் ஜயசேகரவை நாடாளுமன்றத்துக்கு அழைத்தமையானது ஒழுக்கம் குறித்து கேள்வியைத் தோற்றுவிக்கின்றது. அதற்கு சட்டத்தன்மை காணப்படுகிறதா என்பது மற்றொரு விடயமாகும். மேலோட்டமாக எதிர்க்கட்சி எதிர்ப்பை வெளியிடுவதால் பயனில்லை.

பிரேமலால் விடயத்தில் சட்ட பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு நாடாளுமன்ற ஒழுக்கவிதிகள் தொடர்பாக சபாநாயகருக்கு வலியுறுத்தப்பட வேண்டும். ஆளுங்கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கின்றது என்பதற்காக 19 ஆவது திருத்தத்தின் ஜனநாயகத் தன்மையை அழிப்பதற்கோ குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர்களை நாடாளுமன்றத்திற்கு அழைப்பதோ சரியானதா? என்ற கேள்வி சமூகத்தில் தற்போது ஏற்பட ஆரம்பித்துள்ளது. அதிலிருந்து தப்பிச் செல்ல அரசால் முடியாது. என்றார். (எ-இ)

## 43 கிலோ...

னொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி உடுத்துறை கடற்பகுதியில் நேற்று சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றைக் கடற்படையினர் சோதனையிட்டனர். படகில் இருந்து 43.235 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. படகில் இருந்த நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் பேசாலையைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இந்தக் கஞ்சாவை எதிர்பார்த்து உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் இன்னொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். படகு, படகு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்றும், சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

## வடக்கு...

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சுங்கம், துறைமுகம் மற்றும் உற்பத்தி வரி திருத்தங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வடக்கிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எந்த நேரத்திலும் சிங்கள மக்கள், பௌத்த மக்கள் தொடர்பாக மற்றும் பௌத்த பிக்குகளுக்கு எதிரான கருத்துக்களையே கூறி வருகின்றார். பௌத்த பிக்கு ஒருவர் விவசாயம் செய்ய இடமளிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். நாகரிகமயப்படாத மற்றும் கலாசாரமற்றவர்கள் எமது பௌத்தையும் , எமது மக்களையும் பற்றி விமர்சிப்பதற்கு இடமளிக்க முடியாது. வடக்கிலுள்ள காணிகள் விடுவிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட 90 வீதமான காணிகள் மீளக் கையளிக்கப்பட்டுள்ளன என்பதனை நான் மீளவும் உறுதிப்படுத்திக் கூறுகின்றேன்.

இதேவேளை பலாலி விமான நிலையத்தில் விமான நிலைய ஓடுதளத்தையும் அவர் கேட்கின்றார். கடந்த காலங்களில் அங்கு விமானங்கள் இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. அந்த இடங்கள் தேசிய பாதுகாப்பு மிக்கது என்பதனால் அதனை விட்டுக்கொடுக்க முடியாது. இவ்வாறான நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேசிய பாதுகாப்பை, தேசிய பொருளாதாரத்தையும் கருத்தில்கொண்டு அவர்கள் கேட்கும் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த இடமளிக்க முடியாது.என்றார். (எ-22)

## முன்னோக்கி...

டுத்தப்பட்டுள்ள தடைகளைக் களைந்து முன்னோக்கிச் செல்வதே என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

இராஜாங்க அமைச்சர்களுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது

அனைத்தையும் ஒரே தடவையில் மாற்ற முடியாது. அதற்கு நீண்ட காலம் எடுக்கும். பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. 19ஆவது திருத்தத்தின் சில விடயங்களை அவ்வாறே வைத்துக்கொள்ள வேண்டும். முதன்மையான நோக்கம் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மாற்றாது எதிர்கால வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர விடயத்தில் தாமோ அல்லது பிரதமரே நீதிமன்ற நடவடிக்கைளுக்கு எவ்வித தலையீட்டையும் செய்யவில்லை. தலையீடு செய்வதாயின் உயர் நீதிமன்றிலேயே செய்ய வேண்டியிருந்தது. அவ்வாறான விடயம் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடக்கவில்லை. நீதிமன்றத் தீர்ப்பை வழங்கிய நீதிபதியை அரசமைப்புப் பேரவையே நியமித்தது. கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச, தலதா அத்துக்கோரல உள்ளிட்ட சிலரே அதில் இருந்தனர். எதிர்க்கட்சியினருக்கு ஒரு தீர்ப்பு நல்லது, மற்றையது கெட்டது. எதிர்க்கட்சியினர் பொய்யான பரப்புரைளில் ஈடுபட்டுள்ளனர். என்றார். (எ-இ)

## தவறி...

லையில் பீலி வேலை செய்வதற்காக வந்துள்ளனர். கடந்த 30 ஆம் திகதி மாடியில் இவர்களில் 3 பேர் வேலை செய்து கொண்டிருந்தபோது அவர்கள் நின்ற மர தடுப்பு உடைந்து கீழே விழுந்துள்ளனர். அதில் பாதிப்படைந்த அவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர் கடந்த 6ஆம் திகதி உயிரிழந்த நிலையில், மற்றொருவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## நாடாளுமன்ற...

நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. செப்ரெம்பர் 22 ஆம் திகதி முதல் நாடாளுமன்ற அமர்வுகள் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி, பிற்பகல் 5.30 மணிவரை நடைபெறும். பிற்பகல் 4.30 மணி முதல் 5.30 மணிவரை சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடாளுமன்றம் செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் பகல் ஒரு மணிக்கும், வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய நாள்களில் முற்பகல் 10 மணிக்கும் கூடுகின்றது. மாலை 6.30 அல்லது 7.30 மணிவரை சபை அமர்வு நடைபெறும். இந்த நேர கட்டமைப்பே அடுத்த தொடர் முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடருக்கான வாய்மூல விடைக்கான கேள்விகள் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. முற்பகல் 10 மணி முதல் முற்பகல் 11 வரையான காலம் இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (எ44)

## தேசிய...

ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டு இலங்கையில் கறவைப் பசுக்களின் எண்ணிக்கை 1.8 வீதத்தாலும், கறவை எருமை மாடுகளின் எண்ணிக்கை 2.8. வீதத்தாலும் குறைவடைந்துள்ளன என்று மத்திய வங்கியின் வருடாந்த ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, தேசிய முட்டை உற்பத்தி, கோழி இறைச்சி உற்பத்தி ஆகியன 2019ஆம் ஆண்டு அதிகரித்துள்ளன. (எ-44)

## ஹெரோய்ன்..

ரில் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

அங்கு நேற்று மாலை நடத்தப்பட்ட விசேட தேடுதலின்போதே கஞ்சா மீட்கப்பட்டது. கைதானவர் அதே இடத்தைச் சேர்ந்தவர். அவர் சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த வாரமும் யாழ்ப்பாண நகரப் பகுதியில் யாழ்ப்பாணம் விசேட அதிரடிப்படையினர் ஹெரோய்ன் மற்றும் கஞ்சா போதைப் பொருள்களை கைப்பற்றியிருந்தனர். (த-111)

## புலம்பெயர்...

இது தொடர்பில் பிரதமரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஆட்சிக் காலத்தில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள வருகை தந்த புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்களாகிய நீங்கள் அனுபவித்த சிரமங்களை அறிவோம். குறிப்பாக இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு உள்ளூர் முகவர்கள் தரகுப் பணம் பெற முற்பட்டதால் நீங்கள் பலர் நாட்டில் முதலீடு செய்வதைத் தவிர்த்து வெளியேறியுள்ளது எமக்கு மிகவும் வேதனை அளிக்கிறது.

எமது அரசு உங்களுக்கான முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அத்துடன் உங்களிடம் யாராவது தரகுப் பணம் அல்லது வேறு ஏதாவது தொல்லைகள் கொடுத்தால் நீங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகத்துக்கு நேரடியாகத் தெரியப்படுத்தலாம்.

குளிர் பனி என்று பாராமல் உங்களை வருத்தி நீங்கள் உழைக்கும் பணத்தை உங்கள் மண்ணில் நீங்கள் தைரியத்துடன் முதலீடு செய்வதற்கு எமது அரசு என்றும் உங்களுக்கு பக்க பலமாக செயற்படும்.

எம் அனைவரதும் அழகிய இலங்கைத் தீவை உங்கள் வரவால் வெகு விரைவில் இன்னும் பன்மடங்கு அழகிய மற்றும் வளம் கொழிக்கும் உலகம் திரும்பிப் பார்க்கும் நாடாக்குவதற்கு நாம் அனைவரும் கைகோர்த்து பயணிப்போம் என்று மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார் என அவரது ஊடகப் பிரிவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

# அகதிகள் முகாமில் தீ; 13ஆயிரம் பேர் நிர்க்கதி



எதென்ஸ், செப்.11

கிரேக்கத்தின் லெஸ்போஸ் தீவில் அமைந்துள்ள அகதி முகாமொன்றில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தால் 13 ஆயிரம் பேர் நிர்க்கதியாகி யுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பிற்பகுதியில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. கண்ணிமைக்கும் நேரத்தில் முகாம் முழுவதிலும் தீ பரவியது. இதனால் அச்சமடைந்த அகதிகள் கையில் கிடைத்த தங்களது உடைமைகளுடன் முகாமை விட்டு அவசர அவசரமாக வெளியேறினர். தீ விபத்தில் முகாம் முற்றிலுமாக எரிந்து சாம்பலானதால் ஆயிரக்கணக்கான அகதிகள் வெளியேற்றப்பட்டனர். எனினும் கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக அகதிகள் அருகிலுள்ள நகரத்துக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் அவர்கள் சாலைகளிலேயே படுத்து உறங்கும் நிலைக்கு உள்ளாகினர். இவ்விபத்தில் எந்த உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை.



எனினும் புகை மண்டலத்தினால் சுவாசப் பிரச்சினை களை பலர் சந்தித்துள்ளனர் எனத் தெரியவருகிறது. தீ விபத்தினையடுத்து அந்தப் பகுதியில் அவசர கால நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)




ஒக்ஸ்போர்ட் பல்கலையின்

## கொரோனாத் தடுப்பு மருந்து பரிசோதனை இடைநிறுத்தம்

நியூயோர்க். செப்.11

மூன்றாம் கட்டப் பரிசோதனையில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ட்ராசெனிகா நிறுவனமும் இணைந்து மேற்கொண்ட கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்தின் பரிசோதனை இடைநிறுத்தப்பட்டுள்ளது. பிரிட்டனில் அந்த மருந்துக்கான சோதனையில் பங்கேற்ற ஒருவர் சுகவீனமுற்றதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் பல தடுப்பு மருந்துகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றபோதும் அஸ்ட்ராசெனிகா மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் தடுப்பு மருந்து சோதனை முன்னணியில் இருந்து வருகிறது.

இந்தத் தடுப்பு மருந்து 1ஆம் மற்றும் 2ஆம் கட்ட சோதனைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருக்கும் நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு மூன்றாம் கட்ட பரிசோதனை தொடங்கப்பட்டது.


இதில் அமெரிக்காவில் சுமார் 30,000 பேர் பங்கேற்றதுடன் பிரிட்டன், பிரேசில், மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்தும் மக்கள் பலர் இதில் கலந்துகொள்கின்றனர். தடுப்பு மருந்தின் மூன்றாம் கட்ட பரிசோதனை என்பது பொதுவாக பல ஆண்டு காலம் ஆயிரக்கணக்கான பேர் மீது செய்யப்படும். கொரோனாவுக்கு எதிராக சந்தைக்கு வரும் முதலாவது தடுப்பு மருந்தாக இருக்கும் என்று பரவலாக எதிர்பார்ப்பு உள்ளது.

இந்நிலையில் பங்கேற்பாளர் ஒருவருக்கு ஏற்பட்ட பக்க விளைவையடுத்து சர்வதேச ரீதியில் தடுப்பூசி பரிசோதனை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## வெப்பமயமாதல் அதிகரிப்பு

நியூயோர்க். செப்.11

உலக வெப்பமயமாதல் அதிகரித்து செல்கின்றது என புதிய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது. காலநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதற்கு காரணமாக அமைந்துள்ளது. வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தாவிடில் எதிர்வரும் சில வருடங்களில் இந்நிலை மேலும் அதிகரித்த மட்டத்தில் காணப்படுமென ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)



கொரோனாத் தொற்றுக்கு பின்னர் 83 வயதான பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் சாதாரணமாக தமது கடமைகளுக்குத் திரும்பியுள்ளதுடன் முகக்கவசங்களை நீக்கி பின் வழிபாட்டாளர்களைத் தொட்டு, ஆசிர்வதித்துள்ளார்.

# திணறும் இந்தியா

## ஒரே நாளில் 95 ஆயிரம் புதிய தொற்றாளர்கள்




புதுடில்லி, செப்.11

இந்தியாவில் கடந்த 24 மணித்தியாலங்களில் 95 ஆயிரத்து 529 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆயிரத்து 168 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். அதற்கமைய இந்தியாவில் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 44 இலட்சத்து 62 ஆயிரத்து 965 ஆக உயர்வடைந்துள்ளதுடன், 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். (வ-இ)

# இரட்டைக் கோபுர தாக்குதலின் 19ஆம் ஆண்டு நினைவு இன்று



நியூயோர்க். செப்.11

9/11 என்று அழைக்கப்படும் இரட்டைக் கோபுரத் தாக்குதலின் 19ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று அமெரிக்காவில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

2001ஆம் ஆண்டு இதே நாளில் அல்கொய்தா தீவிரவாதிகள் நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரங்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் சுமார் 2ஆயிரத்து 996 பேர் கொல்லப்பட்டனர். 25 ஆயிரம் பேர் வரையில் காயமடைந்தனர். இத்தாக்குதலின் 19ஆம் ஆண்டு நினைவு தினம் கொரோனாப் பரவலின் காரணமாக அமைதியான விதத்தில் கொரோனா நடைமுறைகளைப் பின்பற்றி அனுஷ்டிக்கப்படவுள்ளது. (வ)

# ரொனால்டோ சாதனை

லண்டன், செப்.11

ஐரோப்பிய கால்பந்துச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுடையிலான லீக் தொடரில், ரொனால்டோ, சுவீடனுக்கு எதிரான போட்டியில், முதலாவது கோலை அடித்ததன் மூலம் ஒட்டு மொத்த சர்வதேச கோல் எண்ணிக்கையை 100 ஆக்கி சாதனை படைத்துள்ளார்.

இந்த லீக் தொடர் பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் குழு 3 இல் இடம் பெற்றுள்ள நடப்பு சம்பியன் போர்த்துக்கல் அணி, சோல்னா நகரில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் உள்ளூர் அணியான சுவீடனை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இரு கோல்களையும் போர்த்துக்கல் அணியின் கப்டன் கிறிஸ்டியானா



ரொனால்டோ (45 ஆவது மற்றும் 72 ஆவது நிமிடம்) அடித்தார். மேலதிக உதை (பிரிகிக்) வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில், முதலாவது கோலை அடித்த போது அவரது ஒட்டுமொத்த சர்வதேச கோல் எண்ணிக்கை 100 ஐத் (165 ஆட்டம்) தொட்டது. இந்த மைல்கல்லை எட்டிய முதல் ஐரோப்பிய வீரர் என்ற மகத்தான சாதனையை 35 வயதான ரொனால்டோ படைத்துள்ளார். (ற)

## இன்றைய ஆட்டம்

வலிகாமம் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே மறைந்த நடுவர்கள் ஞாபகார்த்தமாக கால்பந்தாட்டத் தொடர் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடர் வலிகாமம் கால்பந்தாட்டச் சங்கத்தினால், தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஞானமுருகன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து, சென்நியூஸ்ரார் அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு யங்கென்றிஸ் அணியை எதிர்த்து சென்றீக்கலஸ் அணியும் மோதவுள்ளன. (ற-422)

## நடுவர்களுக்கான செயன்முறை பரீட்சை எதிர்வரும் 19 இல்

கொழும்பு, செப்.11

வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி முற்பகல் 8.30 மணி முதல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் பி, தரம் சி வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான செயன்முறைப் பரீட்சையே இவ்வாறு இடம்பெறவுள்ளது. எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளை இந்தச் செயன்முறைப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு பரீட்சை ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ற-422)

## இலங்கை வீரருக்கு வாழ்த்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ

தேசிய மற்றும் தெற்காசிய சாதனைகளை முறியடித்துள்ள இலங்கை வீரர் யுப்புன் அபேகோனுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல்ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அவர், ஜேர்மனியில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 10.16 செக்கன்களில் கடந்து, தேசிய மற்றும் தெற்காசிய சாதனைகளை முறியடித்துள்ளார்.

இந்த நிலையிலேயே அவருக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜேர்மனியில் நடைபெற்ற தடகள போட்டியில் யுபுன் அபேகோன், ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தை 10.16 வினாடிகளில் நிறைவுசெய்து இலங்கை மற்றும் தெற்காசிய மட்டத்தில் சாதனை படைத்தமை குறித்து செய்தி அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இந்தச் சாதனை இலங்கையர்கள் என்ற அடிப்படையில் எம் அனைவரையும் பெருமையடையச் செய்துள்ளது என்றார். (ற)

## அன்னை கழகம் வாகை சூடியது

கொடிகாமம், செப்.11

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், நாவற்குழி அன்னை இளைஞர் கழகம் வெற்றிவாகை சூடியது.

இந்தச் சுற்றுப் போட்டி தேசிய இளைஞர் சேவைகள் அதிகாரி அனுதரன் தலைமையில், கடந்த சனிக்கிழமை நாவற்குழி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில், கோகிலாக்கண்டி மகாலட்சுமி இளைஞர் கழகமும், நாவற்குழி அன்னை இளைஞர் கழகமும் மோதின.

ஆட்ட நேர முடிவில், நாவற்குழி அன்னை இளைஞர் கழகத்தின் முன்கள வீரர் வே.வித்யுஷன் ஒரு கோலை அடித்ததன் மூலம் அந்த அணி வெற்றியைப் பதிவு செய்தது. (ற-159)



உடனடி தேவை
...வங்கட்டை / பூவரசங்கட்டைகள் 8000 உடனடி தேவை.
077 773 4676 (நாதன்)

மேலாளராக பணியாற்ற வேலையாள்கள் தேவை
ஆடை தொழிற்சாலையை நிர்வகித்து திற... நடத்தி செல்வதற்கு கணக்கு கணினி. ...தப்படுத்தல் திறமையும், தகைமையும் உடைய பணியாளர்கள் தேவை.
076 702 0495

...லையாட்கள் தேவை
கிளி...நாச்சி முறிகண்டியில் இயங்கும் ... உணவகத்திற்கு
1. ...மையாளர்
2. I... Cream உற்பத்தி உதவியாளர்
3. மேற்பார்வையாளர்
4. கா...சாளர்
5. ...க்காளர்
உடன் தேவை.
தொடர்புகளுக்கு:
077 386 6250

போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு
• முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
• புகையிரத நிலைய அதிபர்
9.30am-2.30pm
பிரிவு-1 பிரதி சனிக்கிழமை
பிரிவு-2 பிரதி ஞாயிறு
• சட்டமாணி நுழைவு
• இறைவரி சேவை
• பதிவாளர் சேவை
பிரிவு-1 பிரதி சனிக்கிழமை
9.30am-3.30pm
• திறந்த பல்கலைக்கழக B.Ed online exam வழிகாட்டல்
சனி, ஞாயிறு
10.00 am-2.00pm
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்ப்பாண ஆஸ்பத்திரி முன் வீதியில் BOC atm எதிரில்)

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
2020 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான....
மாபெரும் விசேட செயலமர்வு
8.30AM - 2.30PM
செப்ரம்பர் 12,13,14 தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
செப்ரம்பர் 19,20,21 ICT, கணிதம்(7) விவசாய விஞ்ஞானம் ஊடக்கல்வி, புவியியல்
இம்முறை COVID - 19 தாக்கத்தால் இழந்த கல்வியை ஈடுசெய்யும் வகையில்
அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.
புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
சிரமமின்றி கையேடுகளைப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.
முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 / 021 221 7860

## மரண அறிவித்தல்



### தம்பிப்பிள்ளை பொன்னம்பலம்

**(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், இடைப்பிட்டி, காரைநகர்)**

இடைப்பிட்டி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தம்பிப்பிள்ளை பொன்னம்பலம் (08-09-2020) செவ்வாய்க்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காரைநகர், இடைப்பிட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய மலாயன் புகையிரத நிலைய அதிபர் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – லட்சுமி தம்பதிகளின் இளைய மகனும், காரைநகர், கருங்காலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திருவாதர் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சறோஜினிதேவியின் ஆருயிர் கணவரும், கிருஸ்ணவேணி, முத்துத்தம்பிப்பிள்ளை, வெற்றிவேல், காலஞ்சென்ற அன்பழகன், அருளழகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சோதிநாதன், வனஜா, நிரஞ்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு), ஜெகதீசன் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர், மலேசியா), பாக்கியம்(கனடா), இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (இளைப்பாறிய அதிபர்), நல்லையா, மற்றும் தம்பிப்பிள்ளை (நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளர்), காலஞ்சென்றவர்களான சிவசோதி (ஓவசியர்), ஐயம்பிள்ளை, கதிரவேலு (இளைப்பாறிய அதிபர்), கந்தசாமி (சிவகாந்தா ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான கமலாதேவி, மகாதேவன், யோகேஸ்வரன், மற்றும் தர்மராஜா (ராஜா குறொசறீஸ், வவுனியா), புஸ்பதேவி ஆகியோரின் மைத்துனரும், மதுரா, மயூரா, செழியன், சாருஜன், வாசினி(அருளினி), ஆதவன், அகரன், அருணன், ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை(10-09-2020) அன்று கனடாவில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தொடர்புகளிற்கு:**
**சறோஜினிதேவி(மனைவி) (613) 434 6404**
**வெற்றிவேல்(மகன்) (613) 240 6710**
**கிருஸ்ணவேணி(மகள்) (416) 830 8082**

**தகவல்: குடும்பத்தினர்**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.